E Paper

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்

2023 ஏப்ரல் 29 சனிக்கிழமை


# தினகரன்

THINAKARAN තිනකරන්

வரு. 91 இல. 100 | Saturday 29, April, 2023 | 11 பக்கங்கள் | 50/-

## தேசிய வெசாக் விழா இம்முறை சிலாபத்தில்!

### மே 02 முதல் 08 வரை சமய நிகழ்வுகள்



2023ஆம் ஆண்டுக்கான தேசிய வெசாக் விழா இம்முறை சிலாபம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொக்காவில, கெபல்லாவல ஸ்ரீ ரதனசிறி பிரிவென் விகாரையில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. புத்தசாசன, சமய அலுவல்கள் மற்றும் கலாசார அலுவல்கள் 06

காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை தடுக்க

## அபிவிருத்தி அடைந்த நாடுகளின் பங்களிப்பு, நிதி உதவி அவசியம்

### சுற்றாடல் விருது வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி உரை

உலகில் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை தடுக்க இலங்கை உள்ளிட்ட அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளால் மாத்திரம் முடியாது எனவும் சூழலை மாசுபடுத்துவதற்கு காரணமாக உள்ள அபிவிருத்தியடைந்த நாடுகள் நிதியுதவி அளித்து இதற்குப் பங்களிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கு அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு தேவையான வளங்களை பெற்றுக்கொடுக்க இலங்கை முதன்மையான முயற்சிகளை எடுக்கும் எனவும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 06




உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் பின்னணி;

## ஒரு வருடத்திற்கு முன் இலங்கை வந்து திட்டம் தீட்டிய அல்- கொய்தா

### புத்தளம், வனாத்தவில்லு தோட்டத்தில் சந்தித்ததாக பொலிஸார் தெரிவிப்பு

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலுக்கு ஒரு வருடத்துக்கு முன்னர், அல்கொய்தா பயங்கரவாதக் குழுவின் சில பலமான உறுப்பினர்கள் இலங்கைக்கு வந்து புத்தளம், வனாத்தவில்லு லெக்டோ தோட்டத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் திட்டமிட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அல்கொய்தா பயங்கரவாத குழு மற்றும் வெளிநாட்டு பயங்கரவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்ததாக கூறப்படும் உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலின் பிரதான சந்தேக நபர்களிடம் மீண்டும் விசாரணை நடத்தியதில் இந்த உண்மைகள் வெளியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தாக்குதலின் முக்கிய சந்தேக நபர்களில் ஒருவரான முஹம்மட் அப்துல்லா ஹக் மீண்டும் 06

IMF நிதிய உடன்படிக்கை;

## 95 மேலதிக வாக்குகளால் நேற்று சபையில் நிறைவேற்றம்

### ஆதரவாக 120 வாக்குகள்; எதிராக 25 வாக்குகள்

### 79 எம்.பிக்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கை நேற்று 95 மேலதிக வாக்குகளால் சபையில் நிறைவேற்றப்பட்டது. சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழான ஏற்பாட்டினை அமுல்படுத்துவதற்காக பாராளுமன்றத்தின் 06



## ரயில்வே திணைக்களத்தை விரைவில் அதிகார சபையாக மாற்ற எதிர்பார்ப்பு

### பல பிரச்சினைகளுக்கு இதன் மூலம் தீர்வு என்கிறார் அமைச்சர்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ரயில்வே போக்குவரத்துத்துறையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமானால் ரயில்வே திணைக்களத்துக்கு பதிலாக அதனை அதிகார சபையாக மாற்ற வேண்டியது அவசியமென போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார். 06

## மின்சார மறுசீரமைப்பு திட்டத்திற்கு ADB உதவி!

### தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளுக்கு இணக்கம்



மின்சார சபையின் மறுசீரமைப்பு திட்டத்துக்கு தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியுள்ளதாக அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். 06



பெரும் போகத்தின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் இராணுவத்தின் பங்களிப்புடன் வறுமைக் கோட்டின் கீழுள்ள குடும்பங்களுக்கான இலவச அரிசி வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். வேலணை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (படம்: யாழ்.விசேட நிருபர்)

## ஓட்டமாவடியில் கொவிட் சடலங்கள் புதைப்பதற்கு காரணம் நிபுணர் குழுவே

### தவறான வழிநடத்தல் குறித்து கெஹெலிய ரம்புக்வெல்ல கவலை தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொவிட் 19 மூலம் மரணமடைந்தவர்களை ஓட்டமாவடியில் அடக்கம் செய்வதற்கு மேற்கொண்ட தீர்மானத்தில் ஜனாதிபதி செயலணியின் நிபுணர் குழு தவறாக வழிநடத்தப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந் நிபுணர் குழுவின் சில பேராசிரியர்கள் 06

சட்டவிரோத பாஸ்போட் விவகாரம்;

## ஷஷி விமலின் வழக்கு மே 02க்கு ஒத்திவைப்பு



முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவின் மனைவி ஷஷி வீரவன்சவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணையை எதிர்வரும் மே மாதம் 02ஆம் திகதி வரை ஒத்திவைக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் 06

பெருந்தோட்டப்பகுதிக்கென பயிற்றப்பட்டு உள்வாங்கப்பட்டு

## பாதிக்கப்பட்ட 400 ஆசிரியர்களுக்கும் ஆசிரிய நியமனங்களை வழங்க கோரிக்கை

### ஜனாதிபதியிடம் கல்வி இராஜாங்க அமைச்சர் வேண்டுகோள்




பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கென பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக உள்வாங்கப்பட்டவர்களில் பாதிக்கப்பட்டுள்ள 400 பேருக்கு உடனடியாக ஆசிரிய நியமனங்களை வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாசலம் அரவிந்தகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் ஜனாதிபதியிடம் விடுத்துள்ள எழுத்து மூல கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கென உள்வாங்கப்பட்ட 06

தோட்டவாரியாக மட்டுமே நிகழ்வுகள்;

## இ.தொ.காவின் பிரதான மே தின வைபவம் இரத்து!

### எளிமையான நிகழ்வாக கொண்டாட தீர்மானம்



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதான மே தின பேரணியும் கூட்டமும் இம்முறை நடத்தப்படமாட்டாதென, கட்சியின் பொதுச் செயலாளர், அமைச்சர் ஜீவன் தொண்டமான் நேற்று அறிவித்தார். எனினும், தோட்டவாரியாக மிகவும் எளிமையான முறையில் மே தின 06

## காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தீர்வு நிச்சயம் பெற்றுத்தரப்படும்

### யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதியின் ஆலோசகர் உறுதி



இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் உருவாக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவின் மூலம் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என ஜனாதிபதி செயலக பணிக்குழாமின் தலைவரும் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகருமான சாகல ரத்நாயக்க யாழ். நகரில் தெரிவித்தார்.

வேலணை பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்ற வறுமைக் கோட்டின் கீழுள்ள மக்களுக்கு அரிசி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 06



இந்தியாவின் இலங்கைக்கான பிரதி உயர்ஸ்தானிகர் டாக்டர் வெங்கடேஷ்வரனை தமிழ்நாடு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், மரியாதை நிமித்தம் சென்னையிலுள்ள துணைத் தூதரக அலுவலகத்தில் சந்தித்தபோது...

## மே தின பேரணி, கூட்டங்களுக்கு பிரதான கட்சிகள் தயார்

### SLPP பொரளை கெம்பல் மைதானத்தில் ஏற்பாடு



நாட்டின் பிரதான அரசியல் கட்சிகள் தமது மே தின கூட்டம் மற்றும் பேரணிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை நிறைவு செய்துள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மே தின நிகழ்வுகளை பொரளை கெம்பல் மைதானத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் 06

## மேல் மாகாணத்தில் டெங்கு நோயின் தாக்கம் தீவிரம்

### ஒரு வாரத்தில் 1,800 நோயாளர்கள் பதிவு



ஒரு வாரத்தில் சுமார் 1,800 டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளதாக சமூக மருத்துவ நிபுணர் வைத்தியர் நிமல்கா பன்னிலஹெட்டி தெரிவித்துள்ளார். எதிர்வரும் வாரங்களில் பருவமழை தொடங்குவதால், நோயாளிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாமெனவும், 06

## விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள்; விண்ணப்பிக்க மீண்டும் சந்தர்ப்பம்

### மே 02 இணையத்தளம் ஊடாக விண்ணப்பிக்கலாம்

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்கு, பரீட்சகர்களை இணைத்துக்கொள்ள பரீட்சைகள் திணைக்களம் மீண்டும் விண்ணப்பங்களை கோரியுள்ளது.

நேற்று முன்தினம் முதல் எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி வரை இதற்கான விண்ணப்பங்களை இணையத்தளம் வழியாக சமர்ப்பிக்க முடியுமென, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

பௌதீகவியல், இரசாயனவியல், கணிதம், விவசாய 06

அநுராதபுரம் வைத்தியசாலையில்

## சிகிச்சை பெற்றுவந்த இளைஞன் அதிகாலை வெட்டிக் கொலை


**அநுராதபுரம் தினகரன், அநுராதபுரம் மாவட்ட குறூப் நிருபர்கள்**




அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பேராசிரியர் பிரிவிலுள்ள வாட்டில் சிகிச்சை பெற்றுவந்த இளைஞர் ஒருவர் கூரிய ஆயுதமொன்றினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளதாக அநுராதபுரம் தலைமையக 06

## உணவு ஒவ்வாமையால் 26 மாணவர் ஆஸ்பத்திரியில்!

### நானுஓயா பாடசாலையொன்றில் சம்பவம்



**ஹட்டன் சுழற்சி நிருபர்**

நானுஓயா, கிளாசோ பிரதேச பாடசாலையில் வழங்கப்பட்ட உணவை உட்கொண்டதால் உணவு ஒவ்வாமை ஏற்பட்டு, 06

## சிகிரியாவை அழகுபடுத்த யுனெஸ்கோ கைகொடுப்பு

### 04 கோடி ரூபாவை வழங்க தீர்மானம்



சிகிரியா மலையின் ஓவிய குகைக்கு செல்லும் படிக்கட்டுகளை சீரமைப்பதற்கு 4 கோடி ரூபா நிதியுதவி வழங்க யுனெஸ்கோ தீர்மானித்துள்ளது. இந்த நிதி அடுத்த மாதமளவில் கிடைக்குமென மத்திய கலாசார நிதியம் தெரிவித்துள்ளது. அதனூடாக தற்போது சேதமடைந்து காணப்படும் 06

## நேபாளத்தில் தொடர் நிலநடுக்கம் பதிவு

### 4.8, 5.9 ரிச்டர் அளவுகளில் பதிவானது



நேபாளத்தில் இரண்டு முறைகள் நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. முதல் நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 4.8 ஆக பதிவானதாகவும் சுமார் 2 மணிநேரம் கடந்து, இரண்டாவது நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 5.9 ஆக 06

# சர்வதேச செய்திகள்

## உக்ரைனிய நகரங்கள் மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல்



தலைநகர் கீவ் உட்பட் உக்ரைனின் பல நகரங்கள் மீது ரஷ்யா சரமாரி ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்த தாக்குதல்களில் எட்டுப் பேர் கொல்லப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

டினிப்ரோ நகரில் பெண் மற்றும் மூன்று சிறுவர்கள் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டிருப்பதாக அந்த நகர மேயர் தெரிவித்துள்ளார். மத்திய நகரான உமானில் ஏவுகணை தாக்கிய ஒன்பது மாடி குடியிருப்புக் கட்டடம் ஒன்று மோசமாக சேதமடைந்திருப்பது சமூக ஊடகத்தில் வெளியான புகைப்படங்கள் காட்டுகின்றன.

கிரமன்சுக் மற்றும் பல்டாவா நகரங்களிலும் வெடிப்புகள் இடம்பெற்றிருப்பதாக இன்டர்பெக்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கீவில் 11 ஏவுகணைகள் மற்றும் இரண்டு தாக்குதல் ஆளில்லா விமானங்களும் வான் பாதுகாப்பு அமைப்பு மூலம் சுட்டு வீழ்த்தப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கடந்த 51 நாட்களில் ரஷ்ய ஏவுகணைகள் உக்ரைன் தலைநகரை தாக்கி இருப்பது இது முதல்முறை என்று கீவ் நகர இராணுவ நிர்வாகத் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

பெரும் அழிவுக்கு உள்ளாகி இருக்கும் பக்மூத் நகரை கைப்பற்ற ரஷ்ய படைகள் கடுமையாகப் போரிட்டு வரும் நிலையிலேயே இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

மறுபுறம் உக்ரைன் நிர்வாகம் ரஷ்யா கைப்பற்றி இருக்கும் நாட்டின் கிழக்கு மற்றும் தென் பகுதிகளை மீட்பதற்கு பாரிய போர் நடவடிக்கை ஒன்றுக்கு தயாராகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஸ்பெயினில் வரலாறு காணாத கடும் வெப்பம்



ஸ்பெயினில் ஏப்ரல் மாதத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு கடந்த வியாழக்கிழமை (27) 38.8 செல்சியஸ் வெப்பம் பதிவாகி இருப்பதாக அந்நாட்டு வானிலை ஆய்வு நிலையம் குறிப்பிட்டுள்ளது.

தெற்கு ஸ்பெயினின் கோர்டோபா விமானநிலையத்தில் இந்த சாதனை வெப்பநிலை பதிவாகி உள்ளது. கடந்த சில நாட்களாக தாக்கும் கடுமையான வெப்ப அலையினால் எப்ரல் மாதத்தில் எதிர்பார்க்கப்படும் வெப்பநிலையை விட 10–15 செல்சியஸ் அதிக வெப்பம் தாக்கியுள்ளது.

மெதுவாக நகரும் வானிலை அமைப்புடன் இணைந்து ஆபிரிக்காவில் இருந்து மிகச் சூடான காற்று ஸ்பெயினை அடைவதே இந்த கடும் வெப்பத்துக்குக் காரணமாகியுள்ளது.

“இது வழக்கமானதல்ல. இந்த ஆண்டில் வெப்பநிலை முழுமையாக கட்டுப்பாட்டை இழந்துள்ளது” என்று ஸ்பெயின் வாநிலை ஆய்வு நிலையத்தைச் சேர்ந்த கயடனோ டொரஸ் பி.பி.சி தொலைக்காட்சிக்குத் தெரிவித்துள்ளார். அண்மைய நாட்களாக தெற்கு ஸ்பெயின் எங்கும் ஏற்பட்டிருக்கும் கடுமையான வெப்பநிலை அங்கு சென்றிருக்கும் வெளிநாட்டினர் இடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஸ்பெயினில் ஏற்கனவே வறட்சி நிலவுகிறது. காட்டுத்தீ மூளும் அபாயம் உள்ளது என்று நிபுணர்களும் பயிர்கள் பாழாகிவிடும் என்று விவசாயிகளும் எச்சரித்துள்ளனர்.

ஸ்பெயினின் தற்போதைய வெப்பநிலை கோடைக்காலத்தைப் போன்று உள்ளது. காலநிலை மாற்றம் இந்த வெப்ப அலையில் பிரதான பங்காற்றுவதாக நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## சூடானில் மோதலுக்கு மத்தியில் 'போர் நிறுத்தம்' மேலும் நீடிப்பு



சூடானில் மூன்று நாள் போர் நிறுத்தம் காலாவதியாகும் முன்னர் அதனை புதுப்பிப்பதற்கு போர் புரிந்து வரும் இராணுவத்தின் போட்டித் தரப்புகள் இணங்கியுள்ளன.

அண்டை நாடுகள், அதே போன்று அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஐ.நாவின் கடும் இராஜதந்திர முயற்சியை அடுத்து போர் நிறுத்தத்தை மேலும் 72 மணி நேரத்திற்கு நீடிப்பதற்கு இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

எனினும் தலைநகர் கார்டூமில் கடுமையான மோதல் இடம்பெற்று வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. பாதுகாப்பான இடத்திற்கு மக்கள் செல்வதற்கும், பல நாடுகள் தமது பிரஜைகளை வெளியேற்றுவதற்கும் முந்தைய போர் நிறுத்தம் அனுமதிப்பதாக இருந்தது.

இராணுவம் மற்றும் அதன் போட்டி துணைப் படைக்கு இடையிலான மோதல் இரண்டு வாரங்களை எட்டியிருக்கும் நிலையில் உயிரிழப்பு பல நூறுகளை தொட்டுள்ளது.

போர் நிறுத்தம் வியாழக்கிழமை (27) நள்ளிரவுடன் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இந் நிலையில் அந்த போர் நிறுத்தத்தை நீடிப்பதற்கு இராணுவம் வியாழக்கிழமை மாலை இணங்கியதோடு சில மணி நேரம் கழித்து துணைப் படையும் அதற்கு இணக்கத்தை வெளியிட்டது.

அமைதிப் பேச்சுவார்த்தைக்கு தென் சூடான் அழைப்பு விடுத்திருப்பதோடு பேச்சுவார்த்தைக்கு தமது பிரதிநிதிகளை அனுப்ப இராணுவம் இணங்கியுள்ளது.

போர் நிறுத்தத்தை நீடிப்பதில் தீவிரமாக செயற்பட்டதாகவும் அது வன்முறையை குறைக்க உதவியது என்றும் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் தெரிவித்துள்ளார்.

எனினும் நிலைமை எந்த நேரத்திலும் மோசமடையக் கூடும் என்று வெள்ளை மாளிகை பேச்சாளர் கரின் ஜீன் பியெர்ரே தெரிவித்துள்ளார்.

இதேநேரம் இராணுவம் தமது நிலைகளை தாக்குவதாக துணைப் படையினர் குறிப்பிட்டுள்ளனர். மேற்கு டாபுர் மற்றும் ஏனைய மாகாணங்களிலும் மோதல்கள் பதிவாகியுள்ளன.

இந்த மோதல்களில் இதுவரை குறைந்தது 512 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு கிட்டத்தட்ட 4,200 பேர் காயமடைந்திருப்பதாக குறிப்பிடப்பட்டபோதும் உண்மையான உயிரிழப்பு எண்ணிக்கை கூறப்பட்டதை விடவும் மிக அதிகமாக இருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

மோதலில் சிக்கி கடந்த 2 நாள்களில் மட்டும் ஜெனினா நகரில் அதிகமான பொதுமக்கள் உயிரிழந்தனர்.

இலகுரக மற்றும் கனரக ஆயுதங்களுடன் டாபுர் மாகாணத்தில் நடைபெற்று வந்த சண்டை, தற்போது இனக் குழுக்களுக்கு இடையிலான வன்முறையாக உருவெடுத்துள்ளது.

இந்த மோதலில் ஜெனீனா நகர முக்கிய சந்தைப் பகுதி முழுவதும் நாசமடைந்துள்ளது என்று அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நோய்த் தொற்றுகள் ஏற்பட்டாலோ அல்லது போதிய மருத்துவ சேவைகள் இல்லாமல் போனாலோ உயிரிழப்பு பல மடங்காகும் என்று உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

போர் இடம்பெறும் பகுதிகளில் பெரும்பாலான மருத்துவமனைகள் இயங்கவில்லை என்றும் கார்டூமில் 60 வீதத்திற்கும் மேற்பட்ட சுகாதார வசதிகள் செயலிழந்திருப்பதாகவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வெளியேற்ற நடவடிக்கைகள் இடம்பெற்று வரும் சூழலில் பல வெளிநாட்டினர்களும் தொடர்ந்தும் சூடானில் சிக்கித் தவிக்கின்றனர். வெளியேற்றத்திற்கு பயன்படுத்தப்படும் விமான ஓடுதளத்திற்கு செல்வதற்கு சிலர் சிரமப்படுகின்றனர்.

தலைநகரில் உணவு, குடிநீர் மற்றும் எரிபொருள் விநியோகத்தில் சிக்கல் நிலவும் சூழலில் உள்ளூர் மக்களும் அங்கிருந்து வெளியேறி வருகின்றனர்.

இராணுவம் மற்றும் துணைப் படையான பலம்மிக்க விரைவு உதவிப் படைக்கு இடையிலான அதிகாரப் போட்டியை அடுத்து கடந்த ஏப்ரல் 15 ஆம் திகதி மோதல் வெடித்தது.

நாட்டை சிவில் அரசு ஒன்றுக்கு கையளிப்பது தொடர்பில் இராணுவத் தளபதி ஜெனரல் அப்தல் பத்தா அல் புர்ஹான் மற்றும் துணைப்படைத் தளபதி ஜெனரல் மொஹமட் ஹம்தான் டகலோ இடையே ஏற்பட்ட முரண்பாடே மோதலுக்குக் காரணமாகும். குறிப்பாக 100,000 படையினரைக் கொண்ட துணைப் படையை இராணுவத்துடன் இணைப்பதற்கான காலக்கெடு தொடர்பிலேயே முரண்பாடு வெடித்துள்ளது.

சூடானில் நீண்ட காலம் ஆட்சி புரிந்த ஒமர் அல் பஷீரின் சர்வாதிகார அரசுக்கு எதிராக பொதுமக்கள் போராட்டம் தீவிரமடைந்ததையடுத்து, அவரை இராணுவம் 2019ஆம் ஆண்டு ஆட்சியிலிருந்து அகற்றியது. அதனைத் தொடா'ந்து, ஆட்சியதிகாரத்தை ஜனநாயக அரசிடம் ஒப்படைக்கும் வரை இடைக்கால ஏற்பாடாக சிவில்இராணுவ கூட்டணி அரசு ஏற்படுத்தப்பட்டது.

எனினும், அந்த அரசையும் அல் புா'ஹான் தலைமையிலான இராணுவமும், டகலோ தலைமையிலான துணைப் படையும் இணைந்து கடந்த 2021ஆம் ஆண்டு கவிழ்த்தது.

## புர்கினா இராணுவ முகாம் மீது தாக்குதல்: 33 படையினர் பலி



கிழக்கு புர்கினா பாசோவில் இராணுவ முகாம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 33 படையினர் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் 12 பேர் காயமடைந்துள்ளனர். அந்நாட்டில் இடம்பெறும் வன்முறைகளின் தொடர்ச்சியாகவே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேலதிக துருப்புகள் வரும் முன்னர் முற்றுகையில் சிக்கிய படையினர் குறைந்தது 40 பயங்கரவாதிகளை கொன்றதாக இராணுவம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கிழக்கு பிராந்தியத்தின் அவுகருவில் உள்ள இராணுவப் பிரிவின் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

புர்கினா பாசோ இராணுவத்தினர் 2015 தொடக்கம் கிளர்ச்சியாளர்களுடன் போரிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த மோதல்களில் 10,000க்கும் அதிகமான பொதுமக்கள் மற்றும் பாதுகாப்பு படையினர் கொல்லப்பட்டிருப்பதோடு, குறைந்தது இரண்டு மில்லியன் மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். நாட்டின் மூன்றில் ஒரு பகுதி அரச கட்டுப்பாடில் இருந்து விலகியுள்ளது.

புர்கினா பாசோவில் கடந்த ஆண்டு இடம்பெற்ற இரு இராணுவ சதிப்புரட்சிகளை அடுத்தே அந்நாட்டின் தற்போதைய தலைவர் கெப்டன் இப்ராஹிம் தரோரே கடந்த செப்டெம்பரில் ஆட்சிக்கு வந்தார். இந்த தொடர் வன்முறைகள் இராணுவத்திற்குள்ளும் அதிருப்தியை எற்படுத்தியுள்ளது.

நாட்டின் கட்டுப்பாட்டை இழந்த பகுதியை மீட்பதாக தரோரே வாக்குறுதி அளித்தபோதும் இந்த ஆண்டு ஆரம்பித்தது தொடக்கம் பொதுமக்கள் மற்றும் இராணுவத்தின் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உய்குர் நிலவரம் தொடர்பில் மட்ரியட்டில் விசேட கூட்டம்



உய்குரில் முன்னெடுக்கப்படும் கட்டாய உழைப்பு, அடக்குமுறை உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து ஸ்பெய்னின் தலைநகர் மட்ரிட்டில் விசேட ஆலோசனைக் கூட்டமொன்று இடம்பெற்றுள்ளது.

உலக உய்குர் கொங்கிரஸ் தலைவர் டொல்குன் இஷா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் உய்குர் மக்கள் முகம் கொடுத்துள்ள பல்வேறு நெருக்கடிகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளன.

அதேநேரம் ஸ்பெய்னுக்கு விஜயம் செய்துள்ள உலக உய்குர் கொங்கிரஸ் பிரதிநிதிகள் அந்நாட்டின் அரசியல் கட்சிகளது பிரதிநிதிகளையும் செனட் சபை மற்றும் கொங்கிரஸ் உறுப்பினர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளதோடு கட்டாய உழைப்பு உள்ளிட்ட அடக்குமுறைகள் தொடர்பிலும் எடுத்துக்கூறியுள்ளனர்.

## எகிப்தில் ரோமானிய கால புத்தர் சிலை கண்டுபிடிப்பு



செங்கடலில் எகிப்தின் பண்டைய துறைமுகமான பெரேனிஸில் புத்தர் சிலை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருப்பது ரோமப் பேரரசில் இந்தியாவுடனான எகிப்தின் வர்த்தக உறவை வெளிக்காட்டுவதாக உள்ளது.

போலந்து – அமெரிக்க அமைப்பு ஒன்றினால் பெரேனிஸில் உள்ள பண்டைய கோவில் ஒன்றில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் இந்தச் சிலை ரோமானிய காலத்தினுடையது என்று எகிப்து தொல்பொருள் அமைச்சு வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

ரோமானிய காலத்தில் எகிப்து மற்றும் இந்தியா இடையே வர்த்தக உறவு இருந்ததற்கான முக்கிய அடையாளமாக இந்த சிலை உள்ளது என்று எகிப்து உயர் தொல்பொருள் சபையின் தலைவர் முஸ்தபா அல் வசிரி தெரிவித்துள்ளார்.

71 சென்டிமீற்றர் உயரம் கொண்ட இந்த சிலையின் வலது பக்கம் மற்றும் அதன் வலது கால் காணாமல் உள்ளது. புத்தரின் தலையை சுற்றி ஒலி வட்டத்துடன் பக்கவாட்டில் தாமரை மலர் இருப்பது போல் சித்தரிக்கப்பட்டுள்ளது.

பெரேனிஸ் ரோமானிய கால எகிப்தில் மிகப்பெரிய துறைமுகங்களில் ஒன்றாக இருந்ததாகவும் வாசனைத் திரவியங்கள், விலைமதிப்புக் கொண்ட கற்கள், புடவைகள் மற்றும் யானைத் தந்தங்களை ஏற்றிய இந்திய கப்பல்கள் இந்தத் துறைமுகத்திற்கு அடிக்கடி வருவதாகவும் வசிரி குறிப்பிட்டுள்ளார்.

## ஐரோப்பிய தலைவருக்கு பலஸ்தீனர்கள் கண்டனம்



ஐரோப்பிய ஆணைக்குழு தலைவி உர்சுல் வொன் டெர் லியேனின் இஸ்ரேல் குறித்த புகழ்ச்சி, “முறையற்றது, தவறானது மற்றும் பாகுபாட்டுக்குரியது” என்று பலஸ்தீனர்கள் கடுமையாக சாடியுள்ளனர்.

இஸ்ரேலின் சுதந்திர தினத்தை ஒட்டி லியேன் கடந்த புதன்கிழமை வாழ்த்துத் தெரிவித்து வீடியோ செய்தி ஒன்றை வெளியிட்டதைத் தொடர்ந்தே இந்தக் கண்டனம் வெளியாகியுள்ளது.

இந்த வாழ்த்துச் செய்தியில் பாலைவனத்தை மலரச்செய்தது உட்பட இஸ்ரேலை அவர் வாழ்த்தியுள்ளார்.

இந்நிலையில் பலஸ்தீனத்திற்கான பிரதான நன்கொடையாளியாக இருக்கும் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பலஸ்தீன நிர்வாகத்திற்கு இடையே வழக்கத்திற்கு மாறாக மோதல் வெடித்துள்ளது.

பலஸ்தீன வெளியுறவு அமைச்சு, ஐரோப்பிய ஆணைக்குழு தலைவர் மீது இனவாதக் குற்றசாட்டு சுமத்தும் முறையற்ற அறிக்கை அதிர்ச்சி தருவதாக ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதில் இஸ்ரேல் தரிசு நிலத்தில் உருவாக்கப்பட்டதாக லியேனி குறிப்பிட்டிருப்பதை பலஸ்தீன அதிகாரசபை முற்றாக நிராகரித்துள்ளது. இந்த வார்த்தைப் பிரயோக பொதுவாக இஸ்ரேல் மற்றும் அதன் அதரவாளர்களினால் பயன்படுத்தப்படுவதாகும். இதன்மூலம் வெற்று நிலத்தில் இஸ்ரேல் உருவாக்கப்பட்டதாகக் கருதுவதோடு பலஸ்தீன பூர்வீகத்தை முழுமையாக நிராகரிப்பதாக உள்ளது.

இந்தக் கூற்றுக்காக ஐரோப்பிய ஆணைக்குழு தலைவர் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று பலஸ்தீன அதிகார சபை வலியுறுத்துகிறது.

## கல்வியியற் கல்லூரிகளுக்கு புதிய மாணவர் இணைத்தல் மே மாத இறுதிக்குள் நிறைவு

### கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மே மாத இறுதிக்குள் கல்வியியற் கல்லூரிகளுக்கு புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகளை நிறைவு செய்ய தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அந்த மாணவர்களுக்காக கல்வியமைச்சு வழங்கும் 5,000 ரூபா கொடுப்பனவு மற்றும் தொழில்களைப் பெற்றுக் கொண்ட பின்னர் மீளச் செலுத்தும் அடிப்படையில் வங்கிகள் மூலம் வழங்கப்படும் 15,000 ரூபா கடனையும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று சபையில் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது ஆசிரியர் கல்விச் சேவையில் நூற்றுக்கு நாற்பது வீதமானோரே உள்ள நிலையில் அதற்குத் தேவையான தரப்பினரை நியமிப்பதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

மேற்படி மாணவர்களுக்கு கடந்த ஜனவரி மாதத்திற்குள் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டன

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் இஸட் கோருக்கு அமைய விடயதானங்களுக்கு ஏற்ப திறமை அடிப்படையில் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு அவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டுள்ளது.

சிலர் மேன்முறையீடு செய்துள்ளனர். அதனால்தான் சற்று தாமதம் ஏற்படுகிறது.எனினும் எதிர்வரும் மே மாத இறுதிக்குள் கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படும்.

அது மட்டுமன்றி அவர்களுக்கு கல்வியமைச்சினால் தற்போது மாதாந்தம் ஐயாயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகிறது. அதற்கு மேலதிகமாக அவர்களின் உணவு தேவைக்காக வங்கிகள் ஊடாக 15000 ரூபா வரை கடன் வழங்கப்படுகிறது. அவர்கள் கல்வியை முடித்துக் கொண்டு தொழிலுக்குச் செல்லும் போது அதனை மீளச் செலுத்தும் அடிப்படையிலேயே அது வழங்கப்படுகிறது.

06

## கடற்கரையோரத்தை அண்டிய சட்டவிரோத செயற்பாடுகளை தடுக்க அதிரடி வாகனங்கள்

### உள்ளூர் தயாரிப்பை ஜனாதிபதி பார்வையிட்டார்





கடற்கரையோரங்களை அண்டியதாக இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகள், பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் பல்வேறு ஆட்கடத்தல்களை தடுப்பதற்காக ஐடியல் மோட்டார் நிறுவனத்தினால் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 03 விசேட வாகனங்கள், ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்று முன்தினம் (27) கையளிக்கப்பட்டன.

கடலோரம், குளம் சார்ந்த பகுதிகள் மற்றும் எந்த கரடுமுரடான நிலப்பரப்பிலும் (Combat All Te r rain Vehicle) கடற்படை நடவடிக்கைகளுக்கு இலகுவாகப் பயன்படுத்தக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த வாகனங்கள், கொழும்பு மற்றும் மன்னார் கடற்பகுதிகளில் பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகள் மற்றும் போதைப் பொருள்கடத்தலுக்கு எதிராக எதிர்காலத்தில் பயன்படுத்தப்படவுள்ளன. தற்போது இலங்கை கடற்படையின் பொறுப்பிலுள்ள இந்த வாகனங்களின் பயன்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி முன்னிலையில் காண்பிக்கப்பட்டன.

கடற்படையின் பிரதி பிரதானியும் பணிப்பாளர் நாயகமுமான (செயற்பாடுகள்) ரியர் அட்மிரல் பிரதீப் ரத்நாயக்க, பணிப்பாளர் மரைன் கொமடோர்


06

### நிபுணர் குழுவின் தீர்மானத்தால்

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்

### ரவூப் ஹக்கீம் எம்.பி. சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொவிட் 19 சடலங்களை ஓட்டமாவடியில் அடக்கம் செய்வது தொடர்பில் நிபுணர்குழு மேற்கொண்ட தீர்மானங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்கள் தற்போது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் வாய்ப்புள்ளதாக குறிப்பிட்ட அவர், நிபுணர்குழுவின் தவறான தீர்மானத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்குமா என்றும் சபையில் கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் இடைக்கேள்வி ஒன்றை முன் வைத்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

"வைரஸ்கள் நீரின் மூலமாக பரவும் என்ற நிலைப்பாட்டை ஜயவர்தனபுர பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவரே முன் வைத்தார்.

அதனடிப்படையிலேயே கொவிட் காரணமாக மரணமடைந்த இஸ்லாமியர்களை மாத்திரமன்றி பௌத்தர்கள், இந்துக்கள், கத்தோலிக்கர்களும் தூரப் பிரதேசமான ஓட்டமாவடிக்கு எடுத்துச்

06

## IMF கடன் ஒத்துழைப்பு மூலம் நாட்டின் பொருளாதாரம் நிச்சயம் வலுவடையும்

### நிறுத்தப்பட்ட வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கவும் வாய்ப்பு பிரதமர்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டின் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பவும் இடைநிறுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்களை மீள ஆரம்பிக்கவும் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு மூலம் முடியுமென, பிரதமர் தினேஷ் குணவர்த்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை தொடர்பான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய பிரதமர்,

"முன்னொரு போதும் இல்லாத வகையில் கடந்த வருடத்தில் கடுமையான பொருளாதார நெருக்கடியை நாடு எதிர்கொள்ள நேர்ந்தது. அதனால் முழு நாடும் ஸ்தம்பிதமடைந்ததை மக்கள் மறக்க மாட்டார்கள்.

அதனையடுத்து அப்போதிருந்த ஜனாதிபதி, அமைச்சர்கள் பதவி விலகி புதிய அமைச்சரவையையும் பாராளுமன்றத்தின் ஊடாக ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகவும் நியமிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த ஜூன் மாதத்தின் பின்னர் அந்த நெருக்கடிகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் சர்வதேச ரீதியில் முன்னெடுக்கப்பட்டன.

அதன் ஓர் அம்சமாகவே சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதனூடாக தற்போதைய நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு முடியும் என்ற நம்பிக்கை உருவாகியுள்ள நிலையில் அதற்கு அனைவரின் ஒத்துழைப்புகளும் அவசியமாகும்.

நாட்டில் தற்போது அந்நியசெலாவணி அதிகரித்து செல்வதுடன், ரூபாவின் பெறுமதியும் அதிகரித்து வருவதை காண முடிகின்றது.

இவற்றுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கை பலமாக அமையும். இந்த உடன்படிக்கை மற்றும் புதிய முதலீடுகள் ஊடாக எமது நட்பு நாடுகளுடன் இருதரப்பு

06

## போலி இலக்கத் தகடுகளுடன் வாகனம் செலுத்தியவர் கைது

போலி இலக்கத் தகடுகளுடன் காரை செலுத்திச் சென்ற ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டதாக பாணந்துறை வலான மத்திய ஊழல் ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேக நபரிடமிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட காரின் செஸி மற்றும் எஞ்சின் இலக்கங்கள் அழிக்கப்பட்டு மாற்றப்பட்டுள்ளமை பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பாணந்துறை வலான மத்திய ஊழல் ஒழிப்பு பிரிவுக்கு கிடைத்த தகவலின்படி, சந்தேக நபர் மலையகத்திலுள்ள தனியார் பாதுகாப்பு சேவையொன்றில் உயர் பதவியை வகிப்பவரென தெரியவந்துள்ளது.

### கடன் மறுசீரமைப்பை முறையாக மேற்கொண்டால்

## 14 பில்.டொலரை நிவாரணமாக பெற்றுக்கொள்ள முடியும்

### சபையில் அமைச்சர் அலி சப்ரி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கடன் மறுசீரமைப்பை முறையாக மேற்கொண்டால் அதன் மூலம் நாட்டுக்கு 14 பில்லியன் அமெரிக்கன் டொலர்களை நிவாரணமாக பெற்றுக்கொள்ள முடியும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அதனை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்கள் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் மாற்றுத்திட்டங்களை முன் வைக்க முன்வர வேண்டும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

நெருக்கடி நிலையில் இருந்து மீள்வதற்காக சர்வதேச நாணய நிதியம் சில வழிகாட்டல்களையே நமக்கு வழங்கியுள்ளது. அதனை பின்பற்றுவதும் கைவிடுவதும் எனது கைகளிலேயே தங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சர்வதேச நாணய நிதித்துடனான உடன்படிக்கை மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்வதால் மாத்திரம் எமது பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைத்து விடாது. எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொள்ள

06

### இலங்கைக்கான IMF இன் கடன் ஒத்துழைப்பு

## சர்வதேச ரீதியில் இலங்கை மீதான நம்பிக்கையை பலப்படுத்தியுள்ளது

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒத்துழைப்பானது சர்வதேச நாடுகள் மத்தியில் இலங்கை மீதான நம்பிக்கையை பலப்படுத்தியுள்ளது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்லக்கூடாது என ஒரு சாரார் இப்போதும் தெரிவித்து வந்தாலும் அதனைத் தவிர எமக்கு வேறு மாற்று வழி கிடையாது என்பதை சகலரும் உணர வேண்டும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை தொடர்பிலான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

இன்றும் கூட ஒரு சாரார் சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்லக்கூடாது என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளனர். சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் தொடர்பில் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் அதற்காக அனைவரதும் ஒத்துழைப்பைக் கோரினார்.

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையில் அது

06

## இலங்கை வருகிறார் இந்திய விமானப்படைத் தளபதி

### மே முதலாம் திகதி வருகை தரவுள்ளார்



இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரணவின் அழைப்பின் பேரில் இந்திய விமானப் படைத் தளபதி எயார் சீஃப் மார்ஷல் விவேக் ராம் சௌத்ரி உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு எதிர்வரும் மே முதலாம் திகதி இலங்கைக்கு வரவுள்ளார்.

1982ஆம் ஆண்டு இந்திய விமானப்படையில் போர் விமானியாக சேர்ந்த ஏர் சீஃப் மார்ஷல் சவுத்ரி, MiG 21, MiG 23MF, MiG 29 and Su 30MKI உள்ளிட்ட பல்வேறு போர் விமானங்களில் 3,800 மணிநேரம் பறந்த அனுபவம் பெற்றவர்.

அவர் தகுதிவாய்ந்த பறக்கும் பயிற்றுவிப்பாளர், விமானிகள் கருவி மதிப்பீடு பயிற்றுவிப்பாளர் மற்றும் தேர்வாளர் உட்பட பல தகுதிகளுடன் மிகவும் திறமையான நிபுணராகவும் உள்ளார்.

செப்டெம்பர் 30ஆம் திகதி 2021 முதல், அவர் இந்திய விமானப்படையின் 27ஆவது தலைமைத் தளபதியாகப் பணியாற்றுகிறார்.


இலங்கையில் அவர் தங்கியிருக்கும் காலத்தில், விமானப்படை தளபதி ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஆகியோரை சந்திக்கவுள்ளார்.

பிராந்திய விமானப்படைகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துதல், கூட்டுப் பயிற்சி மற்றும் தொழில்நுட்ப அறிவு பரிமாற்றம் பற்றிய

06

## தென்கொரியாவில் ADB யின் 56ஆவது வருடாந்த கூட்டம்

### ஜனாதிபதியின் பிரதிநிதியாக அமைச்சர் அலி சப்ரி பயணம்



வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதி முதல் 5ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) 56ஆவது வருடாந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதிநிதித்துவப்படுத்தி தென் கொரியாவின் இன்சியான் நகருக்குச் செல்லவுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் நிதி அமைச்சர்கள், மத்திய வங்கிகளின் ஆளுநர்கள், முக்கிய உலகளாவிய வங்கிகள், நிறுவனங்கள் மற்றும் ஊடகங்களின் மூத்த அதிகாரிகள் உட்பட சுமார் 3,000 முதல் 4,000 பேர் வரையிலான பங்கேற்பாளர்கள் கலந்து கொள்ளும் ஓர் உயர்மட்ட நிகழ்வாக அமையவுள்ளது.

எதிர்வரும் 4ஆம் திகதியன்று நடைபெறும் ஆளுநர்களின் அமர்வில் வெளியுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி ஓர் அறிக்கையை வழங்கவுள்ளார்.

இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சிக்கான தற்போதைய

06

## கொழும்புக்கு வந்த அதி சொகுசு பயணிகள் கப்பல்

### 900 சுற்றுலாப் பயணிகள் வந்தனர்



மலேசியாவிலிருந்து 900 சுற்றுலாப் பயணிகளுடன் Viking Mass பயணிகள் கப்பல் நேற்றுக் காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

435 பணியாளர்களைக் கொண்ட இக் கப்பலில் வந்த சுற்றுலாப் பயணிகள் கொழும்பு, பின்னவல, கண்டி உள்ளிட்ட இடங்களுக்குச் செல்லவுள்ளனர்.

இந்தக் கப்பல் இன்று இந்தியாவுக்கு புறப்படவுள்ளதாக கொழும்பு துறைமுக பயணிகள் முனையத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 206.30 | 219.03 |
| கனடியன் டொலர் | 228.52 | 242.56 |
| யூரோ | 343.37 | 362.22 |
| ஜப்பான் யென் | 2.3420 | 2.4688 |
| சிங்கப்பூர் டொலர் | 233.49 | 246.88 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 388.64 | 409.24 |
| சுவிஸ் பிராங்க் | 349.42 | 371.48 |
| அமெரிக்க டொலர் | 313.45 | 328.67 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 853.41 | கட்டார் ரியால் | 88.05 |
| குவைத் டினார் | 1,050.55 | சவூதி ரியால் | 85.78 |
| ஓமான் ரியால் | 835.69 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 87.61 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் சித்திரை மாதம் 16ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஷவ்வால் பிறை 08

### குறள் தரும் சிந்தனை



எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்

நெருப்புச் சூழ்ந்து சுட்டாலும்கூட ஒருவர் பிழைத்துக் கொள்ள முடியும்; ஆனால் ஆற்றல் மிகுந்த பெரியோரிடம் தவறிழைப்போர் தப்பிப் பிழைப்பது முடியாது.

# கொவிட் அச்சுறுத்தலை மக்கள் அலட்சியப்படுத்துதல் கூடாது!

நாட்டில் கடந்த சில தினங்களாக கொவிட் 19 தொற்றுக்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது. இதனை அதன் தரவுகளும் எடுத்துக் காட்டக்கூடியனவாக உள்ளன.

இத்தரவுகளின்படி, இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக 19 பேர் தற்போது சிகிச்சை பெற்று வருவதாகவும், அவர்களில் 07 பேர் நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்டவர்கள் என்றும் அத்தரவுகள் தெரிவிக்கின்றன.

இதன் ஊடாக இத்தொற்று மீண்டும் நாட்டில் தலைதூக்குவதற்கான அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக சுகாதாரத் தரப்பினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையில் கொவிட் 19 தொற்று தவிர்ப்புக்கான அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிப்பதன் அவசியம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கொவிட் 19 தொற்றானது 2019 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் சீனாவின் வூஹான் மாகாணத்தில் தோற்றம் பெற்று குறுகிய காலப் பகுதிக்குள் உலகம் முழுவதும் பரவியது. அந்த வகையில் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் நடுப்பகுதி முதல் இலங்கையில் இத்தொற்று பதிவாக ஆரம்பித்தது.

இத்தொற்றின் தாக்கங்களும் பாதிப்புகளும் முழு உலகையும் நிலைகுலையச் செய்திருந்தன. மக்கள் செய்வதறியாது திகைத்து நின்றனர். குறிப்பாக கொவிட் 19 அச்சுறுத்தலுக்கு மத்தியில் மரண பீதி மக்களை ஆட்கொண்டிருந்தது. இத்தொற்றின் பரவுதல் வேகமும் அதன் ஊடான மரணங்களும் இதற்கு துணைபுரியக் கூடியனவாக இருந்தன.

இத்தொற்று அச்சுறுத்தலுக்கு மத்தியில் முழு உலகமும் செய்வதறியாது திகைத்து நின்றது. அவற்றில் அமெரிக்கா, பிரித்தானியா, இத்தாலி உள்ளிட்ட பல நாடுகள் குறிப்பிடத்தக்கவையாகும். அவ்வாறான நிலைக்கு இலங்கையும் முகம்கொடுத்திருந்தது.

அதன் விளைவாக அண்மைக் காலத்தில் உலகில் தோற்றம் பெற்ற தொற்றுநோய்களில் அதிக பாதிப்புக்களையும் உயிரிழப்புகளையும் தோற்றுவித்த நோயாக இத்தொற்று இடம்பிடித்துள்ளது. அதன்படி, இத்தொற்று தோற்றம் பெற்றது முதல் இற்றை வரையும் 76 கோடி 44 இலட்சத்து 74ஆயிரத்து 387 பேரைப் பாதித்துள்ளதோடு, 69 இலட்சத்து 15 ஆயிரத்து 286 பேரின் உயிர்களை காவு கொண்டுமுள்ளது. இலங்கையிலும் கூட 6 இலட்சத்து 71 ஆயிரத்து 756 பேரைப் பாதித்துள்ள இத்தொற்று, 16 ஆயிரத்து 808 பேரின் மரணங்களுக்குக் காரணமாக அமைந்துள்ளது.

இவ்வாறு மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்திக் கொண்டிருந்த இத்தொற்று கடும் அர்ப்பணிப்பு மிக்க உழைப்பின் ஊடாக 2021 ஆம் ஆண்டின் நடுப்பகுதி முதல் இலங்கையில் பெருவீழ்ச்சி நிலைக்குக் கொண்டு வரப்பட்டது. இதற்கு இத்தொற்று தவிர்ப்புக்கான அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்களும் 2020 டிசம்பரில் அவசரத் தேவையின் நிமித்தம் பயன்பாட்டுக்கு வந்த கொவிட் 19 தடுப்பூசியும் பெரிதும் உதவியுள்ளன. அதன் ஊடாக இத்தொற்றின் தாக்கமும் செல்வாக்கும் பலவீனமடைந்துள்ளன. இது மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையும் எதிர்பார்ப்புக்களும் ஏற்பட வழிவகுத்துள்ளது. அதனைத் தொடர்ந்து கட்டம் கட்டமாக இயல்புநிலை ஏற்படுத்தப்பட்டதோடு 2022 ஆரம்பம் முதல் கொவிட் 19 தொற்று தோற்றம் பெறுவதற்கு முன்னரான நிலைமையும் இந்நாட்டில் உருவானது.

இத்தொற்றின் அச்சுறுத்தல் முற்றாக நீங்கி விடவில்லை. அதன் அச்சுறுத்தல் உலகில் காணப்படவே செய்கின்றது. எமது அயல்நாடான இந்தியாவின் சில மாநிலங்களில் இத்தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கையில் மீண்டும் அதிகரிப்பு ஏற்படத் தொடங்கியுள்ளது. இது இத்தொற்று மீண்டும் தலைதூக்குவதற்கான அச்சுறுத்தலைக் கொண்டிருப்பதை எவரும் மறந்து விடலாகாது. அதனால் இத்தொற்று தவிர்ப்பு தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படுவது அவசியம். இருந்தும் கூட இதனைப் பெரும்பாலான மக்கள் கருத்தில் கொள்வதாக இல்லை.

இதன் விளைவாகவே கடந்த சில தினங்களாக இந்நாட்டிலும் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது. இது ஆரோக்கியமான நிலைமை அல்ல.

ஆகவே கொவிட் 19 தொற்று மீண்டும் தலைதூக்கும் அச்சுறுத்தல் குறித்து உடனடியாகக் கவனம் செலுத்துவது அவசியம். தவறும் பட்சத்தில் கடந்த காலங்களைப் போன்ற நிலைமைகளை இத்தொற்று மீண்டும் ஏற்படுத்தி விடலாம். அதனால் இத்தொற்றின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் பொறுப்புடனும் முன்னெச்சரிக்கையுடனும் செயற்படுவது ஒவ்வொருவரதும் பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# யாழ். கதிர்காமம் பாதயாத்திரை மே 06 இல் சந்நிதியில் ஆரம்பம்!



## ஜெயாவேல்சாமி தலைமையில் 46 தினங்கள், 815 கி.மீ. நடைப்பயணம்

இந்துக்களின் பாரம்பரிய கதிர்காமத்திற்கான பாதயாத்திரை வழமை போல இம்முறையும் யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து ஜெயாவேல்சாமி தலைமையில் எதிர்வரும் மே மாதம் 06ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இது தொடர்பான பதாகைகள் யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதி முருகன் ஆலய வளாகத்தில் கட்டப்பட்டுள்ளன.

வடக்கு, கிழக்கு, ஊவா ஆகிய 3 மாகாணங்களையும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகல ஆகிய 7 மாவட்டங்களையும் இணைத்து 46 நாட்களில் 98 ஆலயங்களைத் தரிசித்து 815 கிலோமீற்றர் தூரத்தை நடந்து கடக்கும் இப்புனித பாதயாத்திரை இலங்கையின் மிகநீண்ட தூர கதிர்காமம் பாதயாத்திரையாகக் கருதப்படுகின்றது.

கடந்த 23வருடங்களாக சைவமரபு பாரம்பரியத்துடன் இடம்பெற்றுவரும் இப்பாதயாத்திரை கதிர்காமம் கந்தன் ஆலய கொடியேற்ற தினத்தில் கதிர்காமத்தைச் சென்றடைவது வழமையாகும்.




சந்நிதியில் மே 06ஆம் திகதி அதிகாலை நடைபெறும் விசேட பூஜையினைத் தொடர்ந்து மோகன்சுவாமியால் வேலாயுதமானது கதிர்காம பாதயாத்திரைக் குழுத் தலைவர் ஜெயாவேல்சாமியிடம் சம்பிரதாயபூர்வமாக ஒப்படைக்கப்படும்.



தொடர்ந்து ஆரம்பமாகும் பாதயாத்திரை வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தை அடைந்து பின்னர் அங்கிருந்து ஜெயாவேல்சாமி அணியில் வழமையாக பயணிக்கும் நூறு பக்தர்களுடன் மீண்டும் பாதயாத்திரை தொடரும்.

பாதயாத்திரைக்கான சகல அனுமதிகளும் வழமைபோல பெறப்பட்டிருப்பதாக பாதயாத்திரைக் குழுத்தலைவர் ஜெயாவேல்சாமி தெரிவித்தார்.

இதேவேளை கதிர்காமம் ஆடிவேல்விழா உற்சவத்திற்கான கன்னிக்கால் அல்லது பந்தல்கால் நடும் வைபவம் எதிர்வரும் மே 6ஆம் திகதி நடைபெறவிருக்கிறது. எனவே யூன் 19ஆம் திகதி கொடியேற்றம் இடம்பெற்று யூலை 4ஆம் திகதி எசலபெரஹராவுடனான தீர்த்தோற்சவம் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதுஎவ்வாறிருப்பினும் உற்சவம் தொடர்பான இறுதி முடிவுகள், காட்டுப்பாதை திறப்பு மற்றும் உற்சவ காலம் பெரஹரா தொடர்பிலான இறுதிக்கட்ட தீர்மானங்கள் முடிவுகள் மொனராகல மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறவிருக்கும் முக்கிய கூட்டத்தில் தீர்மானிக்கப்படுமென்பது குறிப்பிடத்தக்கது.

1972ஆம்ஆண்டில் அமெரிக்க முருகபக்தர் பற்றிக்ஹறிகன் கதிர்காமம் பாதயாத்திரையை ஒழுங்கமைக்கப்பட்ட குழுவடிவில் ஆரம்பித்தார். அதன் தொடர்ச்சியாக 1978இல் அவர் ஓய்வுபெற்றதும் அவர் தாங்கி வந்த முருகவேலை காரைதீவைச் சேர்ந்த வேல்சாமி மகேஸ்வரனிடம் ஒப்படைத்தார்.

அன்றிலிருந்து 21 வருடங்களாக வேல்சாமி தலைமையில் பாதயாத்திரை நடைபெற்று வந்தது. கடந்த இரண்டு வருடங்களாக ஜெயாவேல்சாமி இப்பணியில் ஈடுபட்டு வருகிறார்.

ஆரம்பத்தில் வெருகலிலிருந்து இது இடம்பெற்றது. எனினும் நாட்டின் அமைதி நிலவிய பிற்பாடு 2012 முதல் சந்நிதியிலிருந்து இப்பாதயாத்திரை ஆரம்பமாவது குறிப்பிடத்தக்கது.

**வி.ரி.சகாதேவராஜா...**
*(காரைதீவு குறூப் நிருபர்)*

# மூவின மக்களுக்கும் பாலமுனை ஜெம்மியத்து ஸீலான் அல்ஹைறியா நிறுவனம் வழங்கிய உதவி

கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மூவினங்களையும் சேர்ந்த குடும்பத்தவர்களுக்கான உதவி வழங்கும், நிகழ்வு அண்மையில் பாலமுனை ஜெம்மியத்து ஸீலான் அல்ஹைறியா நிறுவனத்தில் இடம்பெற்றது.







பாலமுனை ஜெம்மியத்து ஸீலான் அல்ஹைறியா நிறுவனத்தின் தலைவர் அஷ்ஷெய்க் ஐ.எல்.எம்.ஹாசிம் ஸூரி மதனி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.டக்ளஸ் பிரதம அதிதியாகவும், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் சாபிர், சம்மாந்துறை பிரதேச செயலாளர் ஐ.எம்.ஹனிபா, பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ.பிர்னாஸ், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எம்.அனீஸ் மற்றும் பாலமுனை ஜெம்மியத்து ஸீலான் அல்ஹைறியா நிறுவனத்தின் செயலாளர் உறுப்பினர்கள், பள்ளிவாசல் நிருவாகிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். இதன் போது கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களில் வதியும் தெரிவு செய்யப்பட்ட வசதி குறைந்த முப்பதுக்கும் மேற்பட்ட குடும்பத்தவர்களுக்கு இந்த உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

பாலமுனை ஜெம்மியத்து ஸீலான் அல்ஹைறியா நிறுவனத்தின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாணத்தில் வதியும் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்பட்ட மூவின மக்களுக்கான பல்வேறுபட்ட உதவிகள் கடந்த பல வருடங்களாக வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**ஐ.ஏ.ஸிறாஜ்...**
*(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)*

# நடிகர், நடிகைகளை தலையில் தூக்கி வைத்து கொண்டாடும் பித்துப்பிடித்த சினிமா ரசிகர்கள்!

உலகளவில் விளையாட்டு வீரர்களை பார்க்கிலும் அதிக இரசிகர்கள் கூட்டத்தை கொண்டவர்கள் சினிமா நடிகர்கள். சினிமா பிரபலங்களுக்கு என மிகப் பெரிய ரசிகர்கள் கூட்டம் உள்ளது. அதுவும் குறிப்பாக இந்தியாவில்தான் திரை பிரபலங்களை ரசிகர்கள் தலையில் வைத்து கொண்டாடுகின்றனர். தனது அம்மாவுக்கு உடல் நிலை சரியில்லை என்றால் பதற்றப்படாத சினிமா ரசிகர் ஒருவர், தனக்குப் பிடித்தமான நடிகர் அல்லது நடிகைக்கோ உடல்நிலை சரியில்லாமல் போனால் பதற்றம் அடைவார். ரசிகர்களின் அன்பின் வெளிப்பாடு எண்ணில் அடங்காதது.




வாழ்க்கையில் நாம் என்ன சாதித்தோம் என நினைக்கத் தவறிய சினிமா ரசிகர் ஒருவர், தனக்குப் பிடித்த பிரபலம் கார் வாங்கினாலோ, வீடு வாங்கினாலோ அதைக் கண்டு "அவர் நல்லா இருந்த போதும்" என சந்தோசம் அடைவார்.

இன்னும் சில ரசிகர்கள் ஒரு படி மேலே சென்று தனக்குப் பிடித்த நடிகர்/ நடிகைகளின் திரைப்படம் வெற்றி பெற பால்குடம் சுமப்பது, மொட்டை அடிப்பது, காவடி தூக்குவது என தங்களின் அன்பை விதம்விதமாக வெளிப்படுத்தி வருகின்றனர்.

அந்த வகையில் ஆந்திராவைச் சேர்ந்த நடிகை சமந்தா ரசிகர் ஒருவர், அவர் மீது கொண்ட அபிரிமிதமான அன்பினால் தனது வீட்டில் கோயில் காட்டியுள்ளார். தற்போது சமந்தாவின் சிலை உருவம் புகைப்படம் இணையதளங்களில் வெளியாகி வைரலாகி வருகிறது. ஆனால் நடிகர்/ நடிகைகளுக்கு கோயில் கட்டுவது என்ற திட்டத்துக்கு ஆரம்பமே தமிழ் ரசிகர்கள்தான். இதற்கு முன் தமிழகத்தில் பல சினிமா பிரபலங்களுக்கு ரசிகர்கள் கோயில் கட்டியுள்ளனர். எம்.ஜி.ஆருக்குத்தான் முதன் முதலில் கோயில் கட்டப்பட்டது.

இவரைத் தொடர்ந்து நடிகைக்கு முதன்முதலில் கோவில் கட்டப்பட்டது தமிழ்நாட்டில்தான். இளைஞர்களின் கனவுக்கன்னியாக திகழ்ந்த குஷ்பூவின் மேல் கொண்ட அன்பினால் ரசிகர்கள் கோயில் கட்டினர். குஷ்பூவை தொடந்து ஹன்சிகா, நிதி அகர்வால் என தமிழகத்தில் நடிகைகள் கோயிலின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே போனது. தென்னிந்தியாவில் இருந்தே கோயில் கட்டும் கலாசாரம் இந்தியா எங்கும் பரவியது. தற்போது தென்னிந்திய சினிமாவை கலக்கி வரும் சமந்தாவுக்கு ஆந்திரா மாநிலம் குண்டூர் மாவட்டத்தை சேர்ந்த ரசிகர் ஒருவர் தனது வீட்டில் கோயில் காட்டியிருப்பது ஆச்சரியத்துடன் இணையத்தில் வைரலாகி வருகிறது.

## கோயில் கட்டி கும்பிடும் பாமரத்தன கலாசாரம்!

# பொலிஸ் சேவையில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றியவர் மருதமுனை ஜமால்தீன்

மருதமுனை வரலாற்றில் என்றும் போற்றப்படுபவர் எச்.எல். ஜமால்தீன் எஸ்.எஸ்.பி ஆவார். 2009.04.05 ஆம் திகதி மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு அருகில் வைத்து இனந்தெரியாத ஆயுததாரிகளால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மக்கள் சேவையையும், சமயத் தொண்டையும் தனது உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவர் எச்.எல்.ஜமால்தீன். சிறந்த ஆளுமைப் பண்பைக் கொண்டவராவ அவர் வாழ்ந்தார்.



## அன்னார் மறைந்து 14 ஆண்டுகள் நிறைவு

மருதமுனையைச் சேர்ந்த ஹாமீதுலெவ்வை,சீனத்தும்மா தம்பதியின் புதல்வரான எச்.எல்.ஜமால்தீன் தனது ஆரம்பக்கல்வியை மருதமுனை அல்ஹம்றா வித்தியாலயத்திலும, மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியிலும்; கற்றார். க.பொ.த.சாதாரண தரம் படிப்பதற்காக 1972ஆம் ஆண்டு கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையில் இணைந்து திறமையாக தேறினார்.

1975 ஆம் ஆண்டு உவெஸ்லி உயர்தரப் பாடசாலையிலிருந்து யாழ் இளவாலை ஹென்றி கல்லூரியின் அருட்தந்தை பிரான்சிஸ் அவர்களால் அழைத்துச் செல்லப்பட்டு அங்கு உயர்தரம் கற்றார். அங்கு 19 வயதிற்குட்பட்ட அகில இலங்கை ரீதியான உதைப்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றி அவரது சிறந்த விளையாட்டின் மூலம் தனது அணியை வெற்றிபெறச் செய்தார்.

இவரின் சிறந்த ஆட்டத்திற்காக கல்வி அமைச்சு 'சிறந்த வீரருக்கான தங்கப்பதக்கம்' அணிவித்து இவரை கௌரவித்தது. உதைபந்தாட்டம் மூலம் மருதமுனைக்கு முதன் முதலில் தங்கப் பதக்கம் பெற்று வந்த பெருமை ஜமால்தீனையே சாரும். பாடசாலைக் காலத்தில் சிறந்த விளையாட்டு வீரனாகவும், தலைமைத்துவம் கொண்ட, ஆளுமைத் தன்மை கொண்ட ஒரு மாணவராகவும் இவர் திகழ்ந்தார்.

1994ஆம் ஆண்டு தொடக்கம் மரணிக்கும் வரை அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவராகவும், அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் உறுப்பினராகவும் பணி செய்தார். 2004ஆம் ஆண்டு மலேசியாவுக்கான விளையாட்டுப் புலமைப் பரிசில் பெற்றுச் சென்றார். மேலும் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதான அபிவிருத்தியிலும் தன்னை அர்ப்பணித்து செயற்பட்டதுடன், மைதானத்தில் புதிய கட்டட நிர்மாணிப்புக்கு முழுமூச்சாக செயற்பட்டார்.

1980.04.16 ஆம் திகதி இலங்கை பொலிஸ் சேவையில் உதவிப் பொலிஸ் பரிசோதகராக இணைந்து கொண்டார். களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று வெளியேறி நாட்டின் பல இடங்களில் பணிசெய்தார். 1980.12.24ஆம் திகதி முதல் பொலிஸ் பரிசோதகராக (ஐ.பி) நியமனம் பெற்றார்.

20010531 ஆம் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகராகவும் (ஏ.எஸ்.பி) பதவி உயர்வு பெற்றார். பொலிஸ் சேவையில் இருக்கும் போது பல புலமைப்பரிசில்களைப் பெற்று வெளிநாடு சென்றார்.

2007.06.07ஆம் திகதி தொடக்கம் பொலிஸ் அத்தியட்சகராக பதவி உயர்வு பெற்ற ஜமால்தீன் 2007.11.10ஆம் திகதி தொடக்கம் கல்லடி பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பிரதிப் பணிப்பாளராக மரணிக்கும் வரை கடமை புரிந்தார்.

பொலிஸ் சேவையில் நன்மதிப்பையும் பாராட்டுதலையும் பெற்றவர் ஜமால்தீன். இதனால் பலரது உள்ளங்களில் இன்றும் வாழ்கின்றார்.

**பி.எம்.எம்.ஏ. காதர்...**
*(மருதமுனை தினகரன் நிருபர்)*

# தமிழரின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க நேர்மையுடன் உழைத்தவர் தந்தை செல்வா

## அன்னார் அமரத்துவம் அடைந்து 46 வருடங்கள் நிறைவு

தந்தை செல்வாவின் 46வது நினைவு நாள் கடந்த புதன்கிழமை திருகோணமலையில் அனுஷ்டிக்கப்பட்டது. இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட இளைஞர் அணி ஏற்பாடு செய்திருந்த நினைவுப் பேருரையை கிழக்குப் பல்கலைக் கழக அரசியல் துறை பேராசிரியர் என்.புஷ்பராஷா நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட கிளைத்தலைவர் எஸ். குகதாஸன், பொருளாளர் வெள்ளத்தம்பி சுரேஷ் குமார் மற்றும் உப்புவெளி பிரதேச சபையின் முன்னாள் தலைவர் டொக்டர் ஈ.ஜி.ஞானகுணாளன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

தந்தை செல்வா என அன்போடு அழைக்கப்படும் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் அவர்கள் 1898 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாள் மலேசியாபின் ஈபோ நகரில் பிறந்தார்.

இவருக்கு நான்கு வயதாக இருக்கும் பொழுது இவருடைய குடும்பம் இலங்கைக்குப் புலம் பெயர்ந்தது. இலங்கைக்கு வந்த குடும்பம் யாழ்பாணம் மாவட்டத்திலே உள்ள தெல்லிப் பளையில் குடியமர்ந்து, வாழ்ந்து வந்தது. அவர் வாழ்ந்த வீட்டை தெல்லிப்பளையில் இப்பொழுதும் நாம் காணலாம்.

தந்தை செல்வா தனது தொடக்கக் கல்வியை தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும், இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி மற்றும் கொழும்பு சென்தோமஸ் கல்லூரியிலும், பட்டப்படிப்பை லண்டன் பல்கலைக்கழகத்திலும் பயின்றார்.அவர் தனது 19 ஆவது அகவையிலே பி. எஸ். சி பட்டத்தைப் பெற்றார்.

பட்டம் பெற்ற பின்பு தந்தை செல்வா கொழும்பு சென்தோமஸ் கல்லூரியில் ஆசிரியராகப் பணி புரிந்து வந்தார். இக்காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த தந்தை செல்வாவின் தம்பி உடல்நலமுற்றிருந்தார். அவரைப் போய் பார்ப்பதற்குப் பாடசாலை முதல்வரிடம் தந்தை செல்வா விடுமுறை கேட்டார் . அதற்குப் பாடசாலை முதல்வர் விடுமுறை வழங்க மறுத்தார். இதன் விளைவாகத் தந்தை செல்வா தனது ஆசிரியர் பணியைத் துறந்தார்.



அதன்பின்பு கொழும்பு வெஸ்லி கல்லூரியில் ஆசிரியராக பணிபுரிந்தார். ஆங்கிலேயர் ஆட்சி நிலவிய அக்காலத்தில், கிறிஸ்தவப் பாடசாலை ஒன்றில் பணிபுரிந்த ஆசிரியர் செல்வநாயகம் அவர்கள், அவ்வப்பொழுது தமிழ் தேசிய உடை அணிந்துஅதாவது வேட்டி சட்டை அணிந்து பாடசாலைக்குச் சென்றார். பாடசாலை அதிபர் இதை விரும்பவில்லை. அதனால் இந்தப் பாடசாலை ஆசிரியர் பணியையும் அவர் துறந்தார். அதுமட்டுமன்றித் தந்தை செல்வா தனது திருமண நாளில் தமிழ் தேசிய உடை அணிந்து வந்தமையானது மணமகள் வீட்டில் சலசலப்பை ஏற்படுத்தியது.

ஆசிரியப் பணியைத் துறந்த தந்தை செல்வா இலங்கை சட்டக்கல்லூரியில் சட்டம் பயின்று 1923 ஆம் ஆண்டில் வழக்கறிஞராக வெளியேறினார். அதன் பின்பு நீண்ட காலம் புகழ் பெற்ற குடிசார் (சிவில்) வழக்கறிஞராக விளங்கினார். பின்னர் இவருக்கு கியூசி பட்டமும் கிடைத்தது.

இவர் வழக்கறிஞராக பணிபுரிந்த காலத்தில் ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களுடைய தலைமையில் இயங்கிய அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியில் இணைந்து அதன் துணைத் தலைவராக பணியாற்றி வந்தார்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் அமைக்கப்பட்ட முதலாவது அமைச்சரவையில் சேர்ந்து அமைச்சர் பதவி பெற வேண்டுமென ஜி.ஜி.பொன்னம்பலம் விரும்பினார். தந்தை செல்வா தமிழ் மக்களுக்கு உரிமை கிடைக்கும் வரையில் அமைச்சர் பதவியை வகிக்கக் கூடாதென்ற கொள்கையைக் கொண்டிருந்தார். அரசாங்கம் கொண்டுவந்த மலையக தமிழ் மக்களுடைய குடியுரிமையை பறிக்கும் இந்திய_ இலங்கைக் குடியுரிமைச் சட்டத்தை ஜி.ஜி.பொன்னம்பலம் ஆதரித்தார். தந்தை செல்வா இதை ஏற்றுக்கொள்ளவில்லை. இவ்விரு விடயங்களிலும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாகத் தந்தை செல்வா தமிழ் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகினார். இவரோடு சேர்ந்து மருத்துவர் நாகநாதன், வன்னியசிங்கம் ஆகியோரும் விலகினர்.

தமிழ்க் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகிய தந்தை செல்வா 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் திகதி இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை நிறுவினார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைத் தொடங்கியபின் தந்தை செல்வா போட்டியிட்ட முதலாவது தேர்தலில் தோல்வி கண்டார். எனினும் அதற்குப் பின்னர் அவர் போட்டியிட்ட ஆறு தேர்தல்களிலும் இந்துக்கள் அதிகம் வாழ்கின்ற காங்கேசன்துறை தொகுதியில் கிறிஸ்தவரான தந்தை செல்வநாயகம் தொடர்ச்சியான வெற்றிகளைப் பெற்று வந்தார். இது தமிழ் மக்களிடையே அவருக்கு இருந்த செல்வாக்கைக் காட்டி நிற்கின்றது.

தந்தை செல்வா அரசியலில் இருந்த காலத்தில் அவரது கொள்கைகளை ஏற்பவர்கள் மட்டுமன்றி மறுப்பவர்களும், அவர் மீது மிகுந்த மரியாதை வைத்து இருந்தார்கள். அவரது கொள்கையை எதிர்த்த சிங்கள மக்களும் அவர் அரசியலில் இருப்பதையே விரும்பினர்.

தந்தை செல்வா அவர்கள் அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திக்கவில்லை. அடுத்த தலைமுறை பற்றியே சிந்தித்தார். அவர் அதிகமாக பேசுபவரும் அல்ல, எழுதுபவரும் அல்ல, நல்ல ஆழமாக சிந்தித்துச் செயற்படுபவர். இவர் அரசியலுக்கு வராமல் இருந்தால் இலங்கைத் தமிழர் உரிமைக் கோரிக்கை மட்டுமன்றி தமிழர் என்ற அடையாளமும் அழிந்து போயிருக்கும்.

தந்தை செல்வா தனிப்பட்ட வாழ்கையில் மிக எளிமையான வாழ்கையே வாழ்ந்தார். தெல்லிப் பளையில் உள்ள அவரது இல்லத்திலும் சரி, கொழும்பில் அவர் வாழ்ந்த வாடகை வீட்டிலும் சரி அவரை யாரும் சென்று சந்தித்து தமது சிக்கல்களை கூறி தீர்வு காணக் கூடியவாறு இருந்தது. இலங்கையிலுள்ள அரசியல்வாதிகளில் பலர் குறைந்த வசதியோடு அரசியலுக்கு வந்து, நிறைந்த வசதியோடு வாழ்ந்ததே வரலாறு. ஆனால் தந்தை செல்வா நிறைந்த வசதியோடு அரசியலுக்கு வந்து குறைந்த வசதியோடு இறந்து போனார் என்பதுதான் உண்மையாகும்.

தமிழ் மக்கள் நலனுக்காக குரல்கொடுத்தார். பல அறவழிப் போராட்டங்களை மேற்கொண்டார். சில உடன்படிக்கைகளைச் செய்தார். தந்தை செல்வா எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவோடும், டட்லி.சேனநாயக்காவோடும் உடன்படிக்கைகள் செய்தார்.

இவ்வாறு தமிழ் மக்களின் உரிமை மீட்புக்காக அயராது நேர்மையாக உழைத்த தந்தை செல்வா 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் 26 ஆம் திகதி இவ்வுலக வாழ்கையை நீத்தார்.

இவ்வாறு டொக்டர் ஈ.ஜி.ஞானகுணாளன் தனது உரையின் போது குறிப்பிட்டார்.

**அப்துல்சலாம் யாசீம்...**
(றொட்டவெவ குறூப் நிருபர்)

# 'மூன்று கிராமங்கள் ஒரு சிந்தனை' திட்டத்தின் கீழ் அட்டப்பளத்தில் இலவச கல்வியகம் அங்குரார்ப்பணம்

'மூன்று கிராமங்கள் ஒரு சிந்தனை' என்ற திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் பின்தங்கிய அட்டப்பள்ளம், திராய்க்கேணி, நிந்தவூர் தமிழ்ப்பிரிவு ஆகிய மூன்று கிராமங்களையும் இணைத்து இலவச கல்வியகம் ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

'போகர் கல்வியகம்' என்ற பெயரில் இந்த இலவச கல்வியகம் அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலயத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

போகர் கல்வியக தலைவரும், கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட மாணவனுமான எஸ். கிருஷாந்த் தலைமையில் நடைபெற்ற போகர் கல்வியக திறப்புவிழாவில் பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார்.





சிறப்பு அதிதிகளாக காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி அதிபர் எம். சுந்தரராஜன் மற்றும் அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலய அதிபர் எஸ் .ரகுநாதன் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

மேலும், நட்சத்திர அதிதிகளாக போகர் கல்வியக ஆலோசகர் ரி. புவனராஜா, ஆலய தர்ம கர்த்தாக்களான த.கோபாலன், எஸ்.சந்திரன், அறநெறி ஆசிரியர் உ.ஜெயக்குமார் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

அட்டப்பள்ளத்தின் முதலாவது சட்டபீட மாணவி செல்வி கே.சசிந்தினி தனது அனுபவ பகிர்வை அங்கு மேற்கொண்டார். விழாவில் மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

போகர் கல்வியகத்திற்கான அனுசரணையை காரைதீவைச் சேர்ந்த அவுஸ்திரேலியா நிலஅளவையாளர் சிவபுண்ணியம் லோகேஸ்வரன் மற்றும் சிங்கப்பூர் பொறியியலாளர் அ.அருள் ஆகியோர் வழங்கி வருகின்றனர்.

முதற்கட்டமாக மூன்று கிராமங்களை உள்ளடக்கிய தரம் 4 மற்றும் தரம் 10 மாணவர்களுக்கு கருப்பாடங்களில் இலவசமாக மாலைநேர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**காரைதீவு குறூப் நிருபர்...**

# இந்திய தேசத்தின் பன்முக கலாசாரத்துக்கு கௌரவமளிக்கும் பிரதமர் நரேந்திர மோடி



## திராவிட பாரம்பரியம் மீது மோடிக்கு அலாதிப் பிரியம்; சௌராஷ்டிரா மக்களை தமிழர்கள் வரவேற்று அரவணைத்த வரலாற்றை திருக்குறள் வரிகள் மூலம் நினைவுகூர்ந்தார்

திராவிடர்களின் கலாசாரத்தின் மீது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எப்போதுமே தனியான மோகம் உண்டு. திராவிடர்களின் நடையுடை பாவனைகளையெல்லாம் நன்கு மதிப்பவர் நரேந்திர மோடி. திராவிட மக்களின் உணவுகளையும் சுவைத்து உண்பவர் அவர்.

தமிழ்நாட்டுக்கு வருகை தருகின்ற போதெல்லாம் தமிழர்களின் பாரம்பரிய உடையான வேட்டி, சட்டை, சால்வை அணிந்து வருவார் பிரதமர் மோடி. தமிழ்நாட்டில் அவர் உரையாற்றிய பல சந்தர்ப்பங்களில் பாரதியின் புரட்சிப் பாடல்களையும், திருக்குறளின் இரண்டு வரிகளையும் சுட்டிக் காட்டிப் பேசுவார் அவர்.

புரட்சிக் கவிஞன் பாரதி மீது நரேந்திர மோடிக்கு தனியான மதிப்பு உண்டு. அதே போன்று திருக்குறளின் மீது அபார அபிமானம் கொண்டவர் நரேந்திர மோடி. தமிழ் மக்களைக் கௌரவிக்க வேண்டுமென்ற நோக்கமும் கொண்டவர் பிரதமர் மோடி.

தமிழ்நாட்டுக்கு அவர் விஜயம் செய்திருந்த பல தடவைகளில், தமிழர்களே அதிசயிக்கும் படியாக தமிழர்களின் பாரம்பரிய உடையில் வந்திருந்தார் அவர். இந்தியாவில் இதுவரை பதவியில் இருந்த எந்தவொரு பிரதமரும் பின்பற்றாத பாணியை அவர் கையாள்வது தமிழர்களை உண்மையிலேயே பரவசப்படுத்துவதுண்டு.

அதேபோன்று இந்தியாவின் ஒவ்வொரு மாநிலங்களிலும் வாழ்கின்ற பல்வேறு சமூகங்களின் மக்களையும் கௌரவப்படுத்தி, அவர்களது கலாசாரங்களை மேன்மைப்படுத்துபவர் நரேந்திர மோடி.

இவ்வாறான நிலையில் சில தினங்களுக்கு முன்னர் சவுராஷ்டிரா தமிழ் சங்கமத்தின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் காணொளிக் காட்சி வாயிலாக பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றியிருந்தார்.

"ஒரே பாரதம் உன்னத பாரதம் எனும் சிந்தனையை, பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நமது தமிழ்நாட்டு மக்கள், சௌராஷ்டிர மக்களை வரவேற்று செயல்படுத்தினர்" என்று பிரதமர் நரேந்திர மோடி தனது உரையின் போது தெரிவித்தார்.

பல்லாண்டுகளுக்கு முன்பு, குஜராத் மாநிலத்தில் இருந்து தமிழ்நாட்டுக்கு பல்லாயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்தனர். தமிழ்நாட்டில் குறிப்பிட்ட சில மாவட்டங்களில் சௌராஷ்டிரா மக்கள் பரவலாக வாழ்கின்றனர். குஜராத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையிலான கலாசார தொடர்பை புதுப்பிப்பதற்காக, குஜராத் மாநிலம் சோம்நாத்தில், 'சவுராஷ்டிரா தமிழ் சங்கமம்' நிகழ்ச்சி சில தினங்களுக்கு முன்னர் நடத்தப்பட்டது.

கடந்த முறை 'காசி தமிழ் சங்கமம்' நிகழ்ச்சி உத்தர பிரதேச மாநிலம் வாரணாசியில் நடைபெற்றது. அதேபோல் சௌராஷ்டிரா தமிழ் சங்கமம் நிகழ்ச்சி குஜராத் மாநிலத்தில் நடைபெற்றது. குஜராத் மாநிலம் சோம்நாத் கோயில், துவாரகா, ராஜ்கோட், ஒற்றுமை சிலை அமைந்துள்ள ஏக்தா நகர் ஆகிய பகுதியில் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

சவுராஷ்டிரா தமிழ் சங்கமம் நிகழ்ச்சியையொட்டி மதுரையில் இருந்து குஜராத் மாநிலம் விராவல் நகருக்கு சிறப்புக் கட்டண சிறப்பு ரயில் இயக்கப்பட்டு வந்தது. இந்த ரயில் கடந்த 14 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை இயக்கப்பட்டது. இந்த ரயிலை சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் இருந்து ஆளுநர் ஆர்.என். ரவி கொடியை அசைத்து தொடங்கி வைத்தார். இந்த சங்கம நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக தமிழ்நாட்டில் இருந்து 3,000 பேர் சிறப்பு ரயில் மூலம் குஜராத் சென்றனர். சவுராஷ்டிரா தமிழ் சங்கமம் நிகழ்ச்சிக்கு பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளை குஜராத் அரசு சௌராஷ்டிர மக்களுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

கடந்த 17ஆம் திகதி இந்நிகழ்ச்சி தொடங்கியது. பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் சௌராஷ்டிரா தமிழ் சங்கம நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார். 10 நாட்களாக நடைபெற்ற நிகழ்ச்சி நேற்றுமுன்தினம் நிறைவடைந்தது. இதையொட்டி நிறைவு நாள் நிகழ்ச்சியில், நேற்றுமுன்தினம் பிரதமர் மோடி காணொளிக்காட்சி காட்சி மூலம் உரையாற்றினார். சௌராஷ்டிரா தமிழ் சங்கமத்தின் நிறைவு விழா மலரை பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டார். பின்னர் நிகழ்ச்சியில் பேசிய அவர், நமது நாடு பன்முகத்தன்மை கொண்டது என்றும், வெவ்வேறு மொழிகளை பேசும் மக்கள் வாழும் சிறப்பு வாய்ந்த நாடு என்றும் புகழாரம் தெரிவித்தார்.



### சவுராஷ்டிரா தமிழ் சங்கமம் நிகழ்ச்சியில் வழங்கப்பட்ட புகழாரம்

"மிகவும் கடினமான சூழ்நிலைகளில் கூட புதுமைகளை உருவாக்கும் சக்தி இந்தியாவுக்கு உள்ளது" என்று பெருமிதம் தெரிவித்த பிரதமர் மோடி, "சௌராஷ்டிரா தமிழ்ச் சங்கமம் போன்ற நிகழ்வுகள் இந்தியாவின் ஒற்றுமைக்கு வழிவகுப்பதோடு ஒரே பாரதம், உன்னத பாரதம் என்ற இலக்கை நோக்கிப் பயணிக்க உத்வேகம் அளிக்கும்" எனத் தெரிவித்தார்.

'ஒரே பாரதம் உன்னத பாரதம்' எனும் சிந்தனையை, பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நமது தமிழ்நாட்டு மக்கள் சௌராஷ்டிர மக்களை வரவேற்று செயல்படுத்தினர் என பிரதமர் மோடி தெரிவித்ததோடு, விருந்தோம்பலை வலியுறுத்தும், 'அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து நல்விருந்து ஓம்புவான் இல்' என்ற திருக்குறளையும் மேற்கோள் காட்டிப் பேசினார்.

சௌராட்டிரர் இனத்தவர் யார்?

சௌராட்டிரர் இந்தியாவின் குஜராத் மாநிலத்தின் சௌராஷ்டிர தீபகற்ப பகுதியை பூர்விகமாகக் கொண்டவர்கள். தற்போதைய குஜராத் மாநிலத்தில் உள்ள கிர் சோம்நாத் மாவட்டம், தேவபூமி துவாரகை மாவட்டம், அம்ரேலி மாவட்டம், போர்பந்தர் மாவட்டம், ஜாம்நகர் மாவட்டம், ராஜ்கோட் மாவட்டம், பவநகர் மாவட்டம், மோர்பி மாவட்டம், சுரேந்திரநகர் மாவட்டம், போடாட் மாவட்டம், ஜூனாகாத் மாவட்டம், மற்றும் அகமதாபாத் மாவட்டத்தின் கிழக்கு மற்றும் தென்கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்தவர்கள் அவர்கள்.

தில்லி சுல்தானியர்களின் அச்சுறுத்தல் காரணமாக இம்மக்கள் கி.பி 1025 முதல் சௌராஷ்டிர தீபகற்ப பகுதியை விட்டு வெளியேறி, தற்கால மகாராட்டிரா மற்றும் கர்நாடகா என பல மாநிலங்களில் தங்கி புலம்பெயர்ந்து, இறுதியாகத் தமிழ்நாட்டைத் தாயகமாகக் கொண்டு வாழ்கின்றனர்.

102_1025 காலப்பகுதியில் கஜினி முகமது சௌராட்டிர தேசத்தையும், சோமநாதபுரத்தில் உள்ள சிவன் கோயிலையும் சூறையாடிய பின்னர், அங்கு வாழ்ந்த சௌராட்டிரர்களின் பெரும் பகுதியினர், தேவபூமி துவாரகை மாவட்டத்தின் தலைமையகமான காம்பாலியம் நகரத்தில் குடியேறி அறுபது ஆண்டுகள் வாழ்ந்தனர். அதன் பின்னர் அந்த இனத்தவர் தற்போதைய மகாராஷ்டிரத்தில் உள்ள தேவகிரியில் குடியேறி 300 ஆண்டுகள் வாழ்ந்தனர்.

அதன் பின்னர் தில்லி சுல்தான் அலாவுதீன் கில்சியின் படைத்தலைவரான மாலிக் கபூர் தேவகிரியை 1307 இல் கைப்பற்றிய பின்பு, விஜயநகரப் பேரரசில் 1312 இல் குடியேறினர். விஜயநகரப் பேரரசு, பாமினி சுல்தான்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பின்னர் சௌராட்டிர சமூக மக்கள் 1575 இற்குப் பின்னர் தஞ்சை நாயக்கர்கள் மற்றும் மதுரை நாயக்கர்கள் ஆண்ட தமிழ்நாட்டின், மதுரை, கும்பகோணம், சேலம், தஞ்சாவூர், பரமக்குடி, இராமநாதபுரம், திருநெல்வேலி, நாகர்கோவில் போன்ற பகுதிகளில் குடியேறினர்.

சௌராட்டிர மக்கள் தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், ஆரணி, ஆம்பூர், வாலாஜாபேட்டை, புவனகிரி, சிதம்பரம், சேலம், அம்மாபேட்டை நாமக்கல், இராசிபுரம், பரமத்தி, தஞ்சை, திருபுவனம், தாராசுரம், துவரங்குறிச்சி, திருவாரூர், கும்பகோணம், திருவையாறு, அம்மையப்பன், சேலம், தஞ்சாவூர், அய்யம்பேட்டை, திருச்சி, உறையூர், திருவெப்பூர் (புதுக்கோட்டை), இலுப்பூர், பரம்பூர், அறந்தாங்கி, திண்டுக்கல், பெரியகுளம், நிலக்கோட்டை, மதுரை, பரமக்குடி, எமனேஸ்வரம், இராமநாதபுரம், பாளையங்கோட்டை, கிளாக்குளம், வெள்ளாங்குழி, புதுக்குடி, வீரவநல்லூர், கோட்டாறு (நாகர் கோவில்), மற்றும் கன்னியாகுமரி பகுதிகளில் அதிகம் வாழ்கின்றனர்.

சௌ எனும் சொல் இந்தி மொழியில்நூறு எனவும், ராஷ்டிரம் எனும் சொல்லிற்கு பரந்த நிலப்பகுதிகள் அல்லது நாடு (தேசம்) என்றும் பொருள்படும். நூறு பகுதிகளில் வாழ்ந்தவர்கள் இவர்கள் என இந்தி மொழியில் சௌராஷ்டிரர் என வழங்கலாயிற்று. மேலும் 'சௌரம்' எனும் சொல் சமசுகிருதம் மொழியில் சூரியனைக் குறிக்கும். சௌராஷ்டிர மக்கள் சூரியனை வணங்குவோர் என்றும் பொருள்படும். ஸ்ரீகிருஷ்ணனும் சூரியனை வழிபடும் மரபினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் பேசிய மொழி, சமஸ்கிருதத்தின் பேச்சு மொழியான பிராகிருதம் என்ற குடும்ப மொழியிலிருந்து பிரிந்த கிளை மொழியான 'சௌரஸேனி' மொழியாகும். இந்த 'சௌரஸெனி' மொழியைத் தான் சௌராட்டிரர்கள் தங்களது தேசத்தில் இருந்தபோது பேசினர்.

## ஓட்டமாவடியில் கொவிட்...

தங்களின் அறிவை பயன்படுத்தி மக்களை தவறாக வழிநடத்தியுள்ளனர் என்பதை தாம் ஏற்றுக்கொள்வதாகவும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் சபையில் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

## தேசிய வெசாக் விழா...

அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன இதனைத் தெரிவித்துள்ளார். வெசாக் வாரத்தை முன்னிட்டு மே மாதம் 2ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை நாடு முழுவதும் பல சமய நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக, அவர் மேலும் தெரிவித்தார்.

## பாதிக்கப்பட்ட 400...

4,000 ஆசிரிய உதவியாளர்கள் உரிய பயிற்சிகளை நிறைவு செய்துகொண்டதன் பின்னர், பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும், துரதிஷ்டவசமாக அவர்களில் 400 பேர் இதுவரையில் எந்தவொரு பாடசாலையிலும் நியமன ஆசிரியர்களாக உள்வாங்கப்படவில்லை என்பது கவலைக்குரியதாகும். ஆகவே, இவ்விடயத்தில் ஜனாதிபதி நேரடியாக தலையீடு செய்து பாதிக்கப்பட்டுள்ள 400 பேரையும் ஆசிரியர்களாக உள்வாங்குவதற்கு ஆவண செய்ய வேண்டும் என்றும் அந்த கோரிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.

## மின்சார மறுசீரமைப்பு...

மின்சாரத்துறை நிபுணர்கள் உட்பட ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவருடன் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இந்த இணக்கம் காணப்பட்டுள்ளது. இதற்கமைய, அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு கடன் உதவியை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். மின்சார துறையின் மறுசீரமைப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்கள், மின் கட்டணங்கள், மின்சாரத் துறையில் உள்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவை குறித்தும் இந்த கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது.

## ஷஷி விமலின்...

தீர்மானித்துள்ளது. சட்டவிரோதமான முறையில் கடவுச்சீட்டைப் பெற்றதாக ஷஷி வீரவன்ச மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த வழக்கு நேற்று (28) கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## மே தின பேரணி, கூட்டங்களுக்கு...

சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் பிற்பகல் 2.00 மணிக்கு மே தின நிகழ்வு ஆரம்பமாகவுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் கொழும்பு ஏ.ஈ. குணசிங்க மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, மக்கள் விடுதலை முன்னணியின் மே தின பேரணி இம்முறை பி.ஆர்.சி. மைதானத்திலிருந்து ஆரம்பமாகி விஹார மகா தேவி பூங்காவை சென்றடைந்து, அந்த பூங்காவுக்கருகில் மே தின கூட்டத்தை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மே தின கூட்டத்தை கண்டி பொதுச் சந்தைக்கு முன்பாக நடத்த திட்டமிட்டுள்ளது.

## மேல் மாகாணத்தில் டெங்கு...

இதேவேளை வாராந்தம் 1,000 நோயாளர் பதிவாகும் போதிலும், 500 நோயாளர்களே வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற முடியும் என்றார். டெங்கு நுளம்புகளின் இனப்பெருக்க இடங்களை அழிப்பதன் மூலம் டெங்கு நோயின் எண்ணிக்கையை குறைக்க முடியும்.

இந்த வருடத்தின் ஆரம்பம் முதல் இதுவரை 28,448 டெங்கு நோயாளர் பதிவாகியுள்ளதாகவும் அவர்களில் 13,958 பேர் மேல் மாகாணத்தில் கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் 25 வீதமானவர்கள் பாடசாலை மாணவர்களே எனவும், பாடசாலைகளுக்கு அருகில் டெங்கு நுளம்புகள் பெருகுவது அதிகரித்துள்ளதாகவும், பாடசாலைகளைச் சுற்றியுள்ள சூழலை சுத்தப்படுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். தற்போது பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களில் 62 வீதமானவர்கள் 20 முதல் 59 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இ.தொ.காவின் பிரதான...

நிகழ்வுகளை நடத்துமாறு தோட்டத் தலைவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு மே தின நிகழ்வு தமது கட்சியாலும் தொழிற்சங்கத்தாலும் வருடாந்தம் பிரமாண்டமான முறையில் நடத்தப்படுவது வழக்கமென்றாலும், இம்முறை அவ்வாறு நடத்தப்படமாட்டாதென அவர் தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உயர்பீடக் கூட்டம் கொட்டகலையிலுள்ள சி.எல்.எப் கேட்போர் கூடத்தில் நேற்று (28) கூடியது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான், தலைவர் செந்தில் தொண்டமான், தவிசாளர் மருதபாண்டி ராமேஷ்வரன் எம்.பி. உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

## விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள்;...

விஞ்ஞானம், உயிரியல், இணைந்த கணிதம், தொடர்பாடலும் ஊடகக்கற்கையும், வணிகக்கல்வி, பொறியியல் தொழில்நுட்பவியல், உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல், தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விடைத்தாள் மதிப்பீட்டுக்கு முந்தைய காலக்கெடுவுக்குள் விண்ணப்பிக்காத ஆசிரியர்களும் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரிகள், தமது பிள்ளை அல்லது குடும்ப உறுப்பினர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருப்பின், அவர்கள் தோற்றிய பாடம் அல்லாத ஏனைய பாடங்களுக்கான விடைத்தாள் மதிப்பீட்டுக்கு விண்ணப்பிக்க முடியுமென பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் கடந்த 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு பின்னர் ஓய்வுபெற்ற ஆசிரியர்களும் இதற்காக விண்ணப்பிக்க முடியுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

## சிகிச்சை பெற்றுவந்த இளைஞன் ....

பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று 28 ஆம் திகதி அதிகாலை நான்கு மணியளவில் இடம்பெற்றுள்ளதாக குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் குறிப்பிட்டனர். மன்னார் வீதி, மதவாச்சி பகுதியை வசிப்பிடமாக கொண்ட 24 வயது இளைஞரே வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது.

மதவாச்சி பகுதியில் இரு தரப்பினருக்கிடையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட கைகலப்பின் போது காயமடைந்த நபர் ஒருவர் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அந்த நபரே நேற்று அதிகாலை வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை கைது செய்வதற்காக அநுராதபுரம் வலயத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜயந்த புஷ்பகுமாரவின் ஆலோசனைப்படி அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவின் இரு பொலிஸ் குழுக்கள் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன.

## உணவு ஒவ்வாமையால் ...

26 பாடசாலை மாணவர்கள் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பாடசாலையில் நேற்று மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பகல் உணவை உண்டதால் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக மாணவர்கள் மயக்கமுற்று, வயிற்று வலி, குமட்டல், வாந்தி போன்ற உடல் உபாதைகளுக்குள்ளாயினர்.

அத்தோடு, உணவு உட்கொண்டவர்களில் சுமார் 26க்கும் அதிகமான மாணவர்கள் வயிற்று வலியால் பாதிக்கப்பட்டதை தொடர்ந்து, அவர்கள் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சிகிரியாவை அழகுபடுத்த...

படிக்கட்டுகள் விரைவில் புனரமைக்கப்படுமென மத்திய கலாசார நிதியம் குறிப்பிடுகின்றது.

இதேவேளை, சிகிரியாவில் சுற்றுலாவை மேம்படுத்தும் விசேட திட்டமொன்றும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. சுற்றுலாப் பயணிகள் பயன்படுத்தும் முச்சக்கர வண்டிகளின் கட்டணத்தை ஒழுங்குபடுத்தவும் சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டுவதற்கும் கட்டண முறைமையை அறிமுகப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## நேபாளத்தில் தொடர் ...

பதிவானதாகவும், அந்த ஊடகங்கள் தெரிவித்தன. நேபாளத்தின் பல மாவட்டங்களில் நிலநடுக்கம் உணரப்பட்டதோடு சிறிய நில அதிர்வுகளும் பதிவாகியுள்ளன. உயிர்ச் சேதம் அல்லது சொத்து சேதம் தொடர்பில் தகவல்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லையென, வெளிநாட்டு செய்திகள் தெரிவித்தன.

## ரயில்வே திணைக்களத்தை...

திணைக்கள முறைமையின் கீழ் எதிர்பார்க்கும் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளதாக தெரிவித்த அவர், அந்த திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சபையில் எதிர்க்கட்சியினரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அதனை அதிகார சபையாக உருவாக்கினால் தற்போது ரயில்வே போக்குவரத்துத்துறையில் நிலவும் அனைத்து பிரச்சினைகளுக்கும் அதன் மூலம் தீர்வு காண முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

ரயில்வே திணைக்களமாக காணப்படுவதால் நடைமுறைக்கு சாத்தியமான மாற்றங்களை ஏற்படுத்துவதில் சிக்கல்கள் காணப்படுகின்றன.

ஆகவே, அதனை அதிகார சபையாக மாற்றியமைக்க உரிய சட்ட திருத்தத்தை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் கிங்ஸ் நெல்சன் எம்.பி. முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

## ஒரு வருடத்திற்கு முன்...

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவுக்கு மேலதிக விசாரணைகளுக்காக கடந்த 21 ஆம் திகதி அழைத்துச் செல்லப்பட்டு மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையிலிருந்து இவ்விடயம் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவில் கைது செய்யப்பட்ட அல்கைதா பயங்கரவாத குழுவின் அங்கத்தவரால் அளிக்கப்பட்ட சாட்சியங்களின்படி அந்நாட்டு அரசாங்கம் புலனாய்வு பிரிவுக்கு தெரிவித்துள்ள அறிக்கையின்படி உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியாக செயல்பட்டவரென கூறப்படும் தற்போது பூஸா அதி உயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபரிடம் மீண்டும் விசாரணை செய்ய புலனாய்வு பிரிவினர், நீதிமன்றத்துக்கு விடயங்களை தெரிவித்து கடந்த 21 ஆம் திகதி இதற்கான அனுமதியை பெற்றுக் கொண்டனர். அதன்படி நடத்தப்பட்ட விசாரணையின் போது 2018ஆம் ஆண்டு 05 பேரை கொண்ட அல்கொய்தா பயங்கரவாத குழுவொன்று இலங்கைக்கு வந்து இலங்கையின் பல பிரதேசங்களில் ஆய்வு செய்து தாக்குதலுக்கான திட்டங்களை தயாரித்துள்ளமை தெரிய வந்துள்ளது .

## 95 மேலதிக வாக்குகளால்...

அனுமதி கோரி அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட தீர்மானமே நேற்று வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது 95 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது, இந்த தீர்மானத்துக்கு ஆதரவாக 120 வாக்குகளும் எதிராக 25 வாக்குகளும் அளிக்கப்பட்டன. 79 எம்.பிக்கள் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை. இந்த தீர்மானத்துக்கு ஆதரவாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி, ஜீவன் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், எதிரணி தரப்பிலுள்ள அதாவுல்லா எம்.பி தலைமையிலான தேசிய காங்கிரஸ், அலி சப்ரி எம்.பி. தலைமையிலான முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் ஆதரவாக வாக்களித்தன.

## காணாமல் ஆக்கப்பட்டோருக்கான ..

அங்கு மேலும் உரையாற்றிய அவர், "ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நெறிப்படுத்தலின் கீழ் வறுமைக் கோட்டின் கீழுள்ள குடும்பங்களுக்கு 10 கிலோ அரிசி வீதம் உதவி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வறுமைக் கோட்டின் கீழுள்ள மக்களுக்கு மிகவும் ஒரு வரப்பிரசாதமான விடயம். அதேபோல விவசாய மக்களுக்கு அதாவது இந்த பெரும் போகத்தின் பின்னர் நெல்லினை விற்பனை செய்வதற்கு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது. இலங்கை இராணுவத்தினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளதோடு பெரும்பாலான இடங்களில் நெல் உற்பத்தியிலும் ஈடுபடுகின்றனர்.

இலங்கை இராணுவத்தினரின் விவசாய திட்டத்தில் பெரும் போக அறுவடையின் பின்னர் தமது செலவுகளை கழித்து மிகுதி நெல்லை வறுமைக் கோட்டின் கீழுள்ள மக்களுக்கு வழங்க தயாராக இருப்பதாக இராணுவ தளபதி ஜனாதிபதிக்கு அறிவித்திருந்தார். அவர்களுடைய விருப்பத்தின்படி நேற்று மக்களுக்கு வழங்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்ட யுத்த அழிவுகளுக்கு பின்னர் நாங்கள் கடந்த சில ஆண்டுகளாக வேறு பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

அதாவது கொரோனா நிலை மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்க வேண்டிய ஏற்பட்டது. அதேபோல பொதுமக்களால் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களுக்கும் நாங்கள் முகம் கொடுக்க வேண்டி இருந்தது அதேபோல பொருட்களைக் கொள்ளவும் செய்ய வரிசைகளில் நிற்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

## அபிவிருத்தி அடைந்த...

நேற்று (28) நடைபெற்ற 2021 2022 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி சுற்றாடல் விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய சுற்றாடல் அதிகார சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட 'ஜனாதிபதி சுற்றாடல் விருதுகள் 20212022' இல் கைத்தொழில், வணிகம், திட்டங்கள் மற்றும் நிறுவனங்கள், ஊடகங்கள் மற்றும் சமூகம் ஆகிய முக்கிய துறைகளின் கீழ் 90 பேருக்கு தங்கம், வெள்ளி மற்றும் வெண்கல விருதுகள் வழங்கப்பட்டன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் தங்க விருதுகள் வழங்கி வைக்கப்பட்டதுடன், சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட் ஜனாதிபதிக்கு நினைவுச் சின்னம் ஒன்றை வழங்கினார்.

விருது வழங்கும் நிகழ்வின் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தங்க விருது பெற்றவர்களுடன் குழு புகைப்படத்திலும் இணைந்து கொண்டார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"இந்த நாட்டின் சுற்றாடலைப் பாதுகாப்பதற்கு பங்களித்ததற்காக விருது பெற்ற உங்கள் அனைவரையும் நான் பாராட்ட வேண்டும். அதற்காக தங்களை அர்ப்பணித்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்னர் உரையாற்றியவர்கள், சுற்றாடல் தொடர்பாக இலங்கை முன்னெடுக்கும் வேலைத்திட்டம் என்ன என்பதை விளக்கியதால், அந்த விடயங்களை மீண்டும் நான் குறிப்பிட எதிர்பார்க்கவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் தொடர்பான பாராளுமன்ற விவாதத்திலும் இதற்கு முன்னர் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் போட்டிப் பொருளாதாரத்தின் அவசியத்தையும் அதாவது டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் பசுமைப் பொருளாதாரத்தின் அவசியத்தை பற்றியும் நான் உங்களுக்கு விளக்கியிருக்கிறேன்.

பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் மறுசீரமைப்பு தொடங்கும் வேளையில், இலங்கையை பசுமைப் பொருளாதாரமாக மாற்றுவதற்கு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை பசுமைப் பொருளாதாரமாக மாறும்போது, அதற்கான புதிய சட்டங்களும் தேவைப்படும். நமது சுற்றாடல் சட்டம் 80 களில் நிறைவேற்றப்பட்டதுடன் அதன் பிறகு பல்வேறு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. எனவே, அடுத்த சில ஆண்டுகளில் புதிய சுற்றாடல் சட்டம் மற்றும் பல புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். மேலும், காலநிலை மாற்றம் தொடர்பான சட்டம், Living Entities Act, ஆகியவற்றை அறிமுகப்படுத்த நாம் எதிர்பார்த்துள்ளோம். சிங்கராஜ, ஹோர்டன் சமவெளி, நக்கிள்ஸ் மலைத்தொடர் மற்றும் மஹாவெலி ஆகிய பகுதிகளை Living Entities பகுதிகளாக மாற்றுவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

மேலும், வனப் பாதுகாப்புச் சட்டத்தை கருத்தில் கொண்டு, மீண்டும் காடுகளை உருவாக்கல், முத்துராஜவெல சதுப்பு நிலத்தை பாதுகாத்தல், சுற்றுச்சூழல் அழகை பாதுகாத்தல் போன்றவற்றுக்கு புதிய சட்டம் கொண்டு வரவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். எனவே, எதிர்வரும் ஆண்டில் முன்வைக்கப்பட வேண்டிய ஏராளமான சட்டங்களின் வரைவு தயாரிக்கப்பட வேண்டும்.

மேலும், காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை தடுக்க உலகளாவிய பணிகளில் தனித்துவமான பங்கை வகிக்க இலங்கை எதிர்பார்க்கிறது.

அதற்காக காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்க நாம் முன்மொழிந்துள்ளோம்.

காலநிலை மாற்றம் தொடர்பான அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஏனையவர்களை பயிற்றுவித்தல் மற்றும் பட்டப்பின் படிப்பு கற்கைகளையும் இப்பல்கலைக்கழகம் வழங்கும்.

காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை குறைத்தல், சுற்றுச்சூழல் மற்றும் பசுமைப் பொருளாதாரம் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளித்து முன்னோக்கிச் செல்வதே எமது ஆலோசனையாகும். நம்மைப் போன்ற பல அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் எதிர்கொள்ளும் பிரச்சினை வளப்பற்றாக்குறையாகும். அந்த வளங்களை நாம் எவ்வாறு பெறுவது? இதற்கு பல்வேறு நிதி திட்டங்கள் மற்றும் கருவிகள் உள்ளன.

இந்தத் திட்டங்களின் பலனைப் பெற நாம் முயற்சிக்க வேண்டும். நாம் எவ்வாறு நன்மைகளைப் பெறலாம் மற்றும் திட்டங்களுக்கு எவ்வாறு விண்ணப்பிக்கலாம் என்பதை ஒரு நாடாக இலங்கை நிச்சயமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆனால், உலகில் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை இலங்கையால் மட்டும் மாற்ற முடியாது என்பதுதான் பிரச்சினை. நம்மால் மாத்திரம் தனியாக முடியாது. ஏனைய நாடுகளும் இதில் இணைய வேண்டும். இதற்கெல்லாம் போதிய நிதி உள்ளதா என்பதுதான் கேள்வி. குறிப்பாக, காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைப்பதற்கும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும் தேவையான நிதியை எவ்வாறு பெற்றுக்கொள்வது?

இந்த கேள்வியை நாம் கேட்க வேண்டும், ஏனென்றால் உண்மையான பாதிப்புகள் நாம் செய்தவையல்ல. மேற்கு நாடுகள் மற்றும் அவ்வாறு அபிவிருத்தி செய்ய முடிவெடுத்த ஏனைய நாடுகளும் தான் உண்மையான அழிவைச் செய்தன.

எனவே, அபிவருத்தி அடைந்த நாடுகள், தொழில்மயமாக்கல் செயல்முறை, பல போர்கள் மூலம், பல்வேறு யுத்தங்களினால், குறிப்பாக இரண்டு உலகப் போர்கள் மற்றும் வியட்நாம் போர் மூலம் காலநிலை பாதிப்பிற்கு பங்களித்தன. இப்போது அதன் விளைவுகளை நாம் அனுபவிக்க வேண்டியேற்பட்டுள்ளது. எனவே காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்பைத் தணிக்க நிதி தேவை என்று கூறுகிறோம். நம்மிடம் உள்ளதைத் தவிர, எங்களால் திரட்ட முடிந்ததைத் தவிர அதற்குப் பொறுப்பானவர்களிடமிருந்து நிதியைப் பெற வேண்டும்.


## Stock market closes the week flat on thin volumes...


Daily Market Watch
28th April 2023

Capital TRUST Research (Pvt) Ltd.
42, Sir Mohammed Macan Markar Mawatha, Colombo 3.
Hotline: 0705 666 777
WhatsApp: 0777 233 633

### Market Commentary

The All Share Price Index closed the week on a flat note, declining by 0.3% to end the trading session at 8,983.21 due to modest declines in mainly banking stocks. Amongst the gainers for the day included heavyweights Expolanka Holdings and Dialog which rose by 1.4% and 1.8% respectively. Turnover remained low at LKR 896 mn with trading in Expolanka Holdings and Dialog accounting for 14.3% and 10.5% of the total. With selling gradually drying up, we expect buying to emerge in popular stocks that are trading at bargain prices.


### Top Gainers and Loosers





### Market Performance

| | 28.04.2023 | 27.04.2023 | %Chg. |
|---|---|---|---|
| All Share Price Index | 8,983.2 | 9,012.4 | -0.32 |
| S&P SL 20 Index | 2,617.8 | 2,625.2 | -0.28 |
| Turnover (LKR mn) | 895.8 | 928.8 | -3.6 |
| Foreign Purchases (LKR mn) | 49.6 | 161.9 | -69.4 |
| Foreign Sales (LKR mn) | 195.1 | 107.1 | 82.2 |
| Market Cap (LKR bn) | 3,823.4 | 3,834.2 | -0.3 |
| Market Cap (US$ bn) | 11.9 | 11.9 | -0.3 |
| Traded Companies | 233 | 236 | -1.3 |
| Market PER (x) | 4.9 | 4.9 | -0.2 |
| Price to Book (x) | 0.9 | 0.9 | 0.0 |
| Dividend Yield (%) | 4.1 | 4.1 | 0.5 |


### Relative Strength Index (RSI)




### Contributors to ASPI





### Turnover Breakdown




### Key Rates

| | 28.04.2023 |
|---|---|
| Prime Lending Rate (Avg. Weighted) | 21.03% |
| Fixed Deposit Rate (Avg. Weighted) | 19.80% |
| Treasury Bill Rate (364 Days) | 23.00% |
| Consumer Price Inflation - CCPI (YoY % change) | 50.30% |

### Market Benchmarks




### Largest Trades




### Corporate News

CASH DIVIDENDS

ON'ALLY Holdings PLC (ONAL) - LKR 2.30. XD date - 09.05.2023.

PGP Glass Ceylon PLC (GLAS) - LKR 1.66. XD date - 20.07.2023.

Sri Lanka Telecom PLC (SLTL) - LKR 0.25. XD date - 12.05.2023.

Ceylinco Insurance PLC (CINS) - LKR 45.00. XD date - 29.05.2023.

Company PLC (CTC) - LKR 20.30. XD date - 29.05.2023.

United Motors Lanka PLC (UML) - LKR 1.00. XD date - 02.05.2023.

Nestle Lanka PLC (NEST) - LKR 75 .00. XD date - 06.06.2023.

SCRIP DIVIDENDS

National Development Bank PLC (NDB) - 1 share for 17.9160004596 Shares.

*Disclaimer - The information contained in this material has not been independently verified. No representation or warranty express or implied is made as to, and no reliance should be placed on, the fairness, accuracy, completeness or correctness of the information or opinions contained herein and nothing in this presentation is, or shall be relied upon as, a promise or representation by the Company.*


## கல்வியியற் கல்லூரிகளுக்கு... 03ஆம் பக்கத் தொடர்

ஆசிரியர் கல்விச் சேவையில் 60 வீதமான குறைபாடு நிலவுகின்றது. இது கடந்த மூன்று வருடங்களாக நிலவும் பிரச்சினையாகும். எனினும் கடந்த வாரத்தில் அதற்காக நியமிக்கப்பட்ட உப குழுவின் அனுமதி கிடைத்துள்ளது. மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை நடத்தப்பட்டுள்ளது.

அதற்கான பெறுபேறுகளும் வெளியிடப்படவுள்ளன.

## கடற்கரையோரத்தை அண்டிய... 03ஆம் பக்கத் தொடர்

சனத் பிட்டிகல மற்றும் கடற்படையின் சிரேஷ்ட அதிகாரிகள், ஐடியல் குழுமத்தின் தலைவர் நளின் ஜே.வெல்கம ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு... 03ஆம் பக்கத் தொடர்

சென்று அடக்கம் செய்யப்பட்டனர்.

இது விஞ்ஞான ரீதியில் நிரூபிக்கப்படாத, இனவாத அடிப்படையில் பார்க்கப்பட்டது. எந்தவொரு வைரஸும் நீரின் ஊடாக பரவுவதில்லை என விஞ்ஞான ரீதியில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஒருவர் இறந்தால் அவருக்குள் இருக்கும் வைரஸ்களும் இறக்கும் என நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் அரசாங்கம் சில இனவாதிகளால் தவறாக வழிநடத்தப்பட்டிருப்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்கின்றதா?

அத்துடன் நிபுணர்குழுவின் தவறான தீர்மானம் காரணமாக அதிகமான மக்கள் அந்த காலகட்டத்தில் பாதிக்கப்பட்டிருந்ததுடன் மன அழுத்தங்களுக்கும் ஆளாகியிருந்தார்கள். பாதிக்கப்பட்ட மக்கள் தற்போது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் இடமிருக்கிறது" என்றும் மேலும் தெரிவித்தார்.

## IMF கடன் ஒத்துழைப்பு... 03ஆம் பக்கத் தொடர்

உடன்படிக்கைகளுக்கு செல்ல வாய்ப்புகளும் ஏற்படும்.

பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி வீழ்ச்சியடைந்த நிறுவனங்களை மீண்டும் முன்னேற்றவும் நெருக்கடிகள் காரணமாக கடந்த காலங்களில் இடைநிறுத்தப்பட்டிருந்த வேலைத்திட்டங்களை மீள ஆரம்பிக்கவும் அதன் மூலமாக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்" என்று மேலும் தெரிவித்தார்.

## 14 பில்.டொலரை நிவாரணமாக... 03ஆம் பக்கத் தொடர்

வேண்டும். அந்த நிதியம் நமக்கு ஒரு டாக்டர் போன்றது. நோய் குணமாவதற்கு என்ன செய்ய வேண்டும் என்ற வழிகாட்டல்களையே அது நமக்கு கூறும்.

அந்த வழிகாட்டல்களை பின்பற்றுவது நமது கைகளிலேயே தங்கியுள்ளது. அதனை விட வேறு மாற்று வழி இருந்தால் அதனை எவரும் முன் வைக்கலாம்.

நாடு வரலாற்றில் எப்போதும் இல்லாதவாறு கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளதை நாம் அனைவரும் அறிவோம். நாம் அதை சுலபமானது எனக் கூறினாலும் அல்லது ஒருவர் மீது ஒருவர் விரல்களை நீட்டினாலும் அதற்கு பல்வேறு காரணங்களை கூற முடியும். நாட்டில் நிலவிய கொரோனா தாக்கம், ஈஸ்டர் குண்டுத் தாக்குதல், உக்ரைன் யுத்தம் ஆகியவை எமது பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

## சர்வதேச ரீதியில் இலங்கை... 03ஆம் பக்கத் தொடர்

தவிர்ந்த மாற்று வழி எமக்கு உண்டா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நாடு எதிர்கொண்ட யுத்தம், கொரோனா பாதிப்பு, முறையான நிதி, பொருளாதார முகாமைத்துவமின்மை போன்ற காரணங்களே நாட்டின் இந்த நெருக்கடி நிலைக்கு அடிப்படையாகும். அந்நிய செலாவணி வீழ்ச்சியும் இதில் ஒரு காரணமாகும். பணத்தை அச்சிட்டு தேர்தல் நடத்துங்கள் என்று சிலர் கூறியது போல் மத்திய வங்கியினால் பணத்தை அச்சிட்டு இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

## இலங்கை வருகிறார் இந்திய... 03ஆம் பக்கத் தொடர்

விவாதங்களை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டே அவரது பயணம் அமைந்துள்ளது.

கடல்சார் கண்காணிப்பு நடவடிக்கைகளின் விரிவாக்கமும் விவாதிக்கப்பட வேண்டிய முக்கிய தலைப்புகளில் ஒன்றாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தென்கொரியாவில் ADB யின்... 03ஆம் பக்கத் தொடர்

ஈடுபாடுகள் குறித்து விவாதிப்பதற்காக அமைச்சர் இந்த நிகழ்வுகளுக்கு அப்பால் பல நாடுகளின் பிரதிநிதிகளுடன் இருதரப்பு சந்திப்புகளை நடத்துவாரென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த விஜயத்தில் வெளிவிவகார அமைச்சருடன் வெளிவிவகாரப் பிரிவின் பணிப்பாளர் அஜித் அபேசேகரவும் கலந்துகொள்ளவுள்ளார்.

# கிழக்கின் குரல்







வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயத்தின் முதலாவது வருடாந்த அலங்கார உற்சவம் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம். (படங்கள் காரைதீவு குறூப் நிருபர் )

## பூவரசந்தீவு "வடசல்" பாலத்தின் நிர்மாண பணிகள் ஆரம்பம்

**கந்தளாய் தினகரன் நிருபர்**



திருகோணமலை மாவட்டத்தில் பொருளாதார நெருக்கடி காரணமாக இடை நிறுத்தப்பட்டிருந்த கிண்ணியா பூவரசந் தீவு "வடசல்" பாலம் மீண்டும் சவூதி நிதியத்தின் உதவியுடன் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்.

அதேபோன்று இடைநிறுத் தப்பட்டுள்ள குறிஞ்சாக் கேணி பாலம் அமைக்கும் வேலைகளும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

கல்முனை

## காட்டு யானைகள் அட்டகாசம்

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

கல்முனை மாநகரசபைக்குட்பட்ட நற்பட்டிமுனைக் கிராமத்தில் மக்கள் செறிந்து வாழும் குடியிருப்புகளுக்குள் உள்நுழைந்த காட்டு யானைகள் அங்குள்ள மதில். பயனுள்ள மரங்கள் ஆகியவற்றை துவம்சம் செய்துள்ளது. நேற்றுமுன்தினம் இரவு சம்மாந்துறை கரவாகுப்பற்று வயல் காணி ஊடாக உள்நுழைந்த காட்டு யானைகள் நற்பிட்டிமுனை சிவன் கோவில் பகுதியை அண்டியுள்ள மக்கள் குடியிருப்புக்குள் நுழைந்து வீட்டு மதில்கள், தென்னை, வாழை போன்ற பயனுள்ள மரங்களை துவம்சம் செய்துள்ளது.



இரவு வேளையில் திடீரென கிராமத்திற்குள் நுழைந்த காட்டு யானைகளின் நடமாட்டத்தினால் அங்குள்ள மக்கள் மிகுந்த அச்சமடைந்திருந்தனர்.

தற்போது கடும் உஷ்ணம் நிலவும் இக்காலப்பகுதியில் நீர் நிலைகளும் வற்றியுள்ள நிலையில் நீர் நிலைகளைத்தேடி யானைகள் குடியிருப்பு மனைகளுக்குள் உள்நுழைவதாக தெரிவிக்கின்றனர். நற்பிட்டிமுனை கிராமத்தில் சமீபகாலமாக காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாகவும் இதனால் தாம் அச்சம் அடைந்திருப்பதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நற்பிட்டிமுனை கிராமத்திற்குள் நுழையும் காட்டுயானைகளை விரட்டுவதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மூதூர் டெங்கு நோய் பரவு அபாயம்

## சுற்றுப்புற சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறு அறிவுறுத்தல்

**கந்தளாய், மூதூர் தினகரன் நிருபர்கள்**

மூதூர் பகுதியில் கடந்த நாட்களில் அதிமான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எனவே சுற்றுப்புறத்திலுள்ள நீர்தேங்கும் (சிரட்டை, பேணி, யோகட் கப், இளநீர் கோம்பை, வெற்றுப் பாத்திரங்கள், டயர், போத்தல்கள் போன்ற பொருட்களை இனங்கண்டு அகற்ற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கிணறுகளுக்கு கப்பி (Guppy) வகை மீன் இட்டு பாதுகாப்பாக மூடிவைக்கவேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். பாவிக்காத மலசல கூடமிருப்பின் அதை அகற்றல்/ பாதுகாப்பாக மூடிவைத்தல் வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வெற்றுக் காணிகள் இருந்தால் அங்கு சென்று பார்வையிட்டு சுத்தம் செய்தல். வாழை மரங்களை வெட்டும் போது வாழை மர அடியை கிழங்குடன் வெட்டி அகற்றல் வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவை போன்ற நுளம்புகள் பெருக இடமளிக்காமல் உடனடியாக சுத்தம் செய்து கொடிய டெங்கு நோயிலிருந்து பாதுகாப்பு பெறுமாறு மூதூர் சுகாதார வைத்திய அத்தியட்சகர் காரியாலயத்தினால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. மேலும் சுத்தம் செய்யத் தவறும் பட்சத்தில் பாரபட்சமின்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மூதூர் சுகாதார வைத்திய அத்தியட்சகர் ஹில்மி முஹைதீன் பாவா அறிவித்தல் விடுத்துள்ளார்.

திருகோணமலை

## பல்லின கலை இலக்கிய விழா





**முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்**

திருகோணமலை மாவட்ட செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாவட்ட பல்லின கலை இலக்கிய விழா அண்மையில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்டம் என்பது பல்லின மக்கள் வாழும் ஒரு பகுதியாகும். நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் வகையில் தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகம் இந்நிகழ்வை நடாத்துவதற்கான நிதி ஏற்பாடுகளை வழங்கியிருந்தது. இதன் மூலம் நல்லிணக்கத்தை மேலும் வலுப்படுத்துவதே நோக்கமாக அமைவதாக அரசாங்க அதிபர் இதன்போது தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கயிறு இழுத்தல், பானை உடைத்தல், தலையணை அடி, சங்கீத கதிரை உள்ளிட்ட பல போட்டிகள் நடாத்தப்பட்டதுடன் பரிசில்களும் வழங்கி' வைக்கப்பட்டன.

சிங்கள, தமிழ், இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ சமயங்களின் கலை கலாசார நிகழ்வுகளும் இதன்போது அரங்கேறின.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் ஆரியவதி கலப்பத்தி, மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மேலதிக அரசாங்க அதிபர் ( காணி) எஸ்.சுதாகரன், மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், சக உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.




அக்கரைப்பற்று அஸ் ஸிறாஜ் ஜுனியர் கல்லூரியின் மிக நீண்ட காலத்தேவையாக இருந்து வந்த மின் பிறப்பாக்கியொன்று பாடசாலை அதிபர் எஸ்.றினோஸ்டீனிடம் வழங்கி வைக்கப்பட்டது. பாடசாலை நிர்வாகத்தின் வேண்டுகோளுக்கிணங்க ஐ.பீ.எச்.எஸ் கெம்பஸ் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளரும் பொறியியலாளருமான என். ரீ. ஹமீட் அலியினால் இது வழங்கி வைக்கப்பட்டது. படம் அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்




திருகோணமலை மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 13 முஸ்லிம் ஊடகவியலாளர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகளை UnV Foundtaton அமைப்பினால் வழங்கி வைக்கப்பட்டது. அமைப்பின் தலைவரினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வு கிண்ணியா காரியாலயத்தில் அதன் முகாமையாளர் சதாத் கரீம் தலைமையில் இடம்பெற்றது. படம் கந்தளாய் தினகரன் நிருபர்

## இரண்டரை வயது குழந்தை உட்பட மூவர் மீது தாக்குதல்

### வெல்லாவெளியில் ஒருவர் கைது

**வெல்லாவெளி தினகரன் நிருபர்**



வெல்லாவெளியில் இரண்டரை வயது பச்சிளம் குழந்தை மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு, வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் செயற்குழு உறுப்பினர், மற்றும் அவரது இரண்டரை வயது மகள் மீதே இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெல்லாவெளி கலைமகள் வித்தியாலய பாடசாலைக்கு முன்பாக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் செயற்குழு உறுப்பினர் கோபாலன் பிரசாத் மற்றும் பிள்ளை, மனைவி மூவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்த போது வழிமறித்து தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

இரண்டரை வயது குழந்தை படுகாயமடைந்த நிலையில் மண்டூர் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தாக்குதல் நடாத்தியதாக குற்றம்சாட்டப்பட்டுள்ள தமிழரசு கட்சியின் போரதீவுப்பற்று இணைப்பாளர் வெல்லாவெளி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் போரதீவுப்பற்று பிரதேசசபைக்கு போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.இது சம்பந்தமாக வெல்லாவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

காத்தான்குடி

## சடலம் மீட்பு

**மண்டூர் தினகரன் நிருபர்**

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டு கல்லடிப்பாலத்திலிருந்து பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேயர் வீதி டச்வார் கல்லடி பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடைய கபிரியல் செபமாலை என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்தவர் என தெரியவருகின்றது. கடந்த 26ஆம் திகதி வீட்டிலிருந்து சென்றவர் நேற்று முன்தினம் கல்லடி டச்வார் பிரதேசத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. மட்டக்களப்பு நீதிமன்ற நீதவான் பீற்றர் போலின் உத்தரவுக்கமைய சம்பவ இடத்திற்கு சென்ற காத்தான்குடி பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி வேலு மணிமாறன் சடலத்தை பார்வையிட்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்குட்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

## மட்டக்களப்பு உயர்தொழில்நுட்ப கல்லூரி ஏற்பாடு செய்த இரத்ததான நிகழ்வு

**பாசிக்குடா நிருபர்**



மட்டக்களப்பு உயர் தொழில்நுட்ப கல்லூரியின் ஏற்பாட்டில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வொன்று கல்லூரி பணிப்பாளர் செ.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உயர் தொழில்நுட்ப கல்லூரியின் உத்தியோகத்தர்கள், மாணவர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் என ஏராளமானோர் ஆர்வமுடன் கலந்து கொண்டு குருதிக்கொடை வழங்கினர். மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக மட்டக்களப்பு உயர்தொழில்நுட்ப கல்லூரியின் சமூக விழுமிய செயற்பாடாக இரத்ததான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையின் இரத்த வங்கிக்குப் பொறுப்பான வைத்தியர் குழாம் இந்நிகழ்வுக்கு வருகைதந்து குருதிகளை சேகரித்துக் கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பின் அனுசரணையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா பிரதம விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் சிவில் சமூக அமைப்பின் முன்னாள் தலைவர் கலாநிதி K.பிரேமகுமார் மற்றும் சிவில் சமூக அமைப்பின் உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# தலைமன்னார் பிரதேசத்தில் பாடசாலை இடைவிலகல் ஆய்வு

**தலைமன்னார் விசேட நிருபர்**

தலைமன்னார் பகுதியில் பாடசாலை இடைவிலகல்கள், சீரற்ற வரவு போன்ற விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டுவருகின்றது. தலைமன்னார் பகுதியில் ஐந்து கிராம அலுவலகப் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் ஐந்து பாடசாலைகள் இயங்கி வருகின்றன.

தலைமன்னார் பிரதேச பகுதியில் தலைமன்னார் பியரில் இரண்டு பாடசாலைகளும், தலைமன்னார் சந்தியில் ஒரு பாடசாலையும் தலைமன்னார் கிராமம் மேற்கு பகுதியில் ஒரு பாடசாலையும் மற்றும் கட்டுக்காரன் குடியிருப்பில் ஒரு பாடசாலையும் இயங்கி வருகின்றது.

இப்பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களில் சீரற்ற வரவு, இடைவிலகல் போன்ற பிரச்சினைகள் தொடர்பில் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தலைமன்னார் பியர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை (27) விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.



இக் கூட்டத்தில் பாடசாலை அதிபர்கள், சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள், கிராம அலுவலகர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.

மாணவர்களை பாடசாலை அபிவிருத்திக்குழு மூலம் இனம்காணப்பட்டு கிராம அலுவலகர்களுக்கு தெரியப்படுத்தி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் இணைந்து செயற்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் ஒழுங்கீனம் மற்றும் இடைவிலகலுக்கான காரணங்களை கண்டறிந்து பிரதேச செயலாளர் ஊடாக இனம் காணப்படும் பிரச்சினைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடும்ப பொருளாதார நெருக்கடி, கல்வியில் நாட்டமின்மை, விரக்தி மற்றும் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆர்வம் போன்ற காரணங்களினால் பாடசாலை இடைவிலகல், வரவு குறைவு போன்ற பிரச்சினைகள் இடம்பெறுவதாக ஆய்வுகளிலிருந்து தெரியவருகின்றது.

# வற்றாப்பளை கண்ணகி அம்மன் வைகாசி பொங்கல் உற்சவ ஏற்பாடுகள்

## மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் கலந்துரையாடல்

**முல்லைத்தீவு நிருபவர்**

முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்று சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு முன்னாயத்த கலந்துரையாடலொன்று மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் தலைமையில் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் நிகழ்வுக்கு முன்னர் வைகாசி மாதம் 22 ஆம் திகதி பாக்குத்தெண்டலும் , 29 ஆம் திகதி தீர்த்தமும், ஆனி மாதம் 5 ஆம் திகதி வருடாந்த பொங்கல் உற்சவமும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் முன்னாயத்த ஏற்பாடுகள் தொடர்பில் ஆலய பரிபாலன சபையினர் மற்றும் ஆலய உற்சவத்துக்கு வருடா வருடம் உதவிடும் ஏனைய திணைக்களங்களுக்கிடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.



இந்நிகழ்வில் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் (நிர்வாகம்), மாவட்ட பிரதம கணக்காளர் ம.செல்வரட்ணம், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் ம.உமாமகள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், மாவட்ட பொறியியலாளர், பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள அதிகாரி, மின்சாரசபை பொறியியலாளர், நீர் வழங்கல் அதிகாரிகள், கரைதுறைப்பற்று பிரதேச சபை உத்தியோகத்தர்கள், இலங்கை போக்குவரத்து சபை அதிகாரிகள், சுகாதார பரிசோதகர்கள், இலங்கை செஞ்சிலுவை சங்க உறுப்பினர், முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி, முல்லைத்தீவு மாவட்ட இராணுவப் பொறுப்பதிகாரி, பொலிஸார், இராணுவத்தினர், ஆலய பரிபாலன சபையினர், கலாசார உத்தியோகத்தர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலில் ஆலய உற்சவ காலத்துக்கு தேவையான ஆலய வளாகத்தை சூழவுள்ள வீதிகள் புனரமைப்பு, ஆலய வளாக தூய்மைப்படுத்தல் உள்ளிட்ட விடயங்களோடு ஆலயத்துக்கு வருகைதரும் பக்தர்களுக்காக சுகாதாரம், குடிநீர், போக்குவரத்து வசதி மின்சாரம், பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

# யாழில் தென்னிந்திய கலைஞர்கள்



**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள இசை நிகழ்வில் கலந்துகொள்வதற்காக தென்னிந்திய கலைஞர்கள் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக நேற்று முன்தினம் தினம் வியாழக்கிழமை மதியம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை மாலை 05 மணிக்கு இடம்பெற்ற நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காகவே இவர்கள் வருகை தந்திருந்தனர்.

இந்நிகழ்வில் தென்னிந்திய கலைஞர்கள் சாம் விஷால், ஸ்ரீதர் சேனா, மானசி, ஹரிப்ரியா, மூக்குத்தி முருகன், கலக்கப்போவது யாரு புகழ் நவீன் மற்றும் குரேஷி ஆகியோருடன் யாழ்ப்பாணத்தை சேர்ந்த நாத இளவரசர் பஞ்சமூர்த்தி குமரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்னாயக்க , அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இராணுவத் தளபதி விகும் லியனகே உள்ளிட்டோர் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நேற்றையதினம் விஜயம் செய்தனர். இதன்போது 2022/2023 ஆம் ஆண்டு காலப்போக அரசின் நெல் கொள்வனவு மற்றும் இருப்பினை விநியோகித்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கான இரண்டாம் கட்ட அரிசி பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

படம்: யாழ்.விசேட நிருபர்

# புத்தூர் அரசினர் மருந்தகத்துக்குள் புகுந்து தாக்குதல் சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு

**கரவெட்டி தினகரன் நிருபர்**

யாழ்.புத்தூர் அரசினர் மத்திய மருந்தகத்துக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியமை, வைத்தியருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்தமை போன்ற குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய 3 பேர் கைது செய்யப்பட்டு மே மாதம் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மார்ச் 10ஆம் திகதி புத்தூர் சந்தியில் தண்ணீர் பந்தல் அமைத்த இளைஞர்கள் ஒலிபெருக்கியை அதிக சத்தத்தில் ஒலிக்க விட்டுள்ளனர்.

இதனையடுத்து தண்ணீர் பந்தல் அமைக்கப்பட்டிருந்த இடத்திற்குச் சென்றிருந்த வைத்தியர் ஒலிபெருக்கியின் சத்தத்தை குறைக்கும்படி கேட்டுள்ளார்.

பின்னர் வைத்தியசாலைக்குள் நுழைந்த சிலர் தாக்குதல் நடத்தியதுடன் வைத்தியருக்கு கொலை அச்சுறுத்தலும் விடுத்திருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக வைத்தியர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்த போதும் பொலிஸார் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனால் வைத்திய சேவைகளை நிறுத்தப்போவதாக புத்தூர் அரசினர் மத்திய மருந்தகத்தினர் அறிவித்திருந்தனர்.

மேலும் மருத்துவ சங்கம், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் ஆகியனவும் இது குறித்து சட்ட நடவடிக்கை எடுக்க வலியுறுத்தினர்.

கடும் அழுத்தங்களின் பின்னரே சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் மூன்று சந்தேகநபர்களை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர்.

# சித்தி விநாயகர் கலை மன்றத்தின் முத்தமிழ் விழா

**சாவகச்சேரி விசேட நிருபர்**

சாவகச்சேரி பெரியமாவடி சித்திவிநாயகர் கலை மன்றத்தின் 45 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு முத்தமிழ் விழா நிகழ்வுகள் இன்றும் நாளையும் சித்தி விநாயகர் கலையரங்கத்தில் இடம்பெறவுள்ளன.

நிலைய தலைவர் மு.கதிரவேலு தலைமையில் இடம்பெறவுள்ள முதலாம் நாள் நிகழ்வுகள், கோவிற்குடியிருப்பு கிராம அலுவலர் ஞானசேந்தன் தம்பதியினரின் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் அ.சீராளன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் பட்டிமன்றம், இசை நிகழ்வு, இலக்கிய நாடகம் மற்றும் சிந்து நடைநாடகம் ஆகியன இடம்பெறவுள்ளன.

அத்துடன் ஞாயிற்றுக்கிழமை நிகழ்வுகள் வைத்தியர் க.சி.அருளானந்தம் தம்பதியினரின் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகவுள்ளன.

# பட்டப்பகலில் வீடு உடைத்து திருட்டு

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் மல்லாகத்தில் பட்டப்பகலில் வீடு உடைத்து 19 தங்கப்பவுண் நகைகளை திருடிய குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து திருடப்பட்ட நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர். கடந்த செவ்வாய்க்கிழமை மல்லாகத்தில் வீட்டிலிருந்தவர்கள் வெளியில் சென்றிருந்த போது வீட்டின் கதவை உடைத்து உள்நுழைந்து நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டது. சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய ஒருவரைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அவரிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகளால் வியாபார நிலையங்கள் பரீட்சிப்பு

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

பலாங்கொடை நகர மற்றும் புறநகர் கிராமப்பகுதிகளில் உணவகங்கள் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பபட்டு வருகின்றன.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கூட்டாக சென்று இவற்றை பரிசோதித்து வருகின்றனர்.

பெரிய, சிறிய என வித்தியாசம் இன்றி அனைத்து உணவகங்களும் இவ்வாறு திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழ், சிங்கள புத்தாண்டின் பின்னர் அதிகாரிகள் தமது சோதனை நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனனர். பலாங்கொடை நகரம் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் பல உணவகங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றன.

பலவற்றில் பொதுமக்களின் பாவனைக்குதவாத உணவுப் பொருட்களும் காலாவதியான உணவுப்பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். முதலாவது முறையாக பரீட்சிக்கப்படும் போது இனங்காணப்படுகின்ற குறைபாடுகள் தொடர்பில் உணவக வியாபாரிகளுக்கு எச்சரிக்கை செய்யப்படுவதாகவும் இந்நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்றால் இவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படுமெனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.




ஊவா மாகாண சர்வமத மாநாடு, மொனராகலை 'சிதுமின' விடுதியில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காணலாம்.

(படம் பதுளை தினகரன் நிருபர்)




# 'டிரான்ஸ் பேரன்சி இன்டர்நேசனல்' நிறுவனத்தின் கிளைக்காரியாலயம் கண்டியில் திறந்து வைப்பு

தங்களுடைய சேவைகளை மலையக மக்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்ற நோக்கில் டிரான்ஸ் பேரன்சி இன்டர்நேசனல் நிறுவனத்தின் கிளைக்காரியாலயம் அண்மையில் கண்டியில் திறந்து வைக்கப்பட்டது.

ஊழலற்ற நாட்டை உருவாக்குவோம் தகவல் அறியும் சட்டத்தை அனைவரிடமும் கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் செயற்பட்டுவருகின்ற டிரான்ஸ் பேரன்சி இன்டர்நேசனல் நிறுவனமானது கடந்த பல வருடங்களாக இலங்கையில் செயற்பட்டு வருகின்றது.

கொழும்பை தலைமையகமாகவும் பல மாவட்டங்களிலும் தங்களுடைய கிளைக்காரியாலயங்களை அமைத்தும் செயற்பட்டு வருகின்ற மேற்படி நிறுவனமானது ஊழல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனைகளையும் உதவிகளையும் செய்து வருகின்றது.

மேலும் தகவல் அறியும் சட்டமூலத்தை நாடு முழுவதும் அனைத்து தரப்பினரிடமும் கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கத்துடன் அது தொடர்பான செயலமர்வுகளையும் பல்வேறு செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றது.

தங்களுடைய தேவைகளுக்கு நேரில் சென்று அல்லது அவசர தொலைபேசி இலக்கமான 0112866777 எனும் என்னுடன் தொடர்பு கொள்ள முடியும்.

# சிறுகதைத்தொகுதி வெளியீட்டு விழா

பதுளை ஹுமைரா அல் அமீன் எழுதிய செம்பனிச் சிதறல்கள் எனும் சிறுகதைத்தொகுதியின் வெளியீட்டு விழா சட்டத்தரணி ஜீ.சேனாதிராஜாவின் தலைமையில் எதிர்வரும் 2023.05.07ஆம் திகதி காலை 8.30 மணிக்கு பதுளை தர்மதூத வீதியிலுள்ள சைமன் பீரிஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நூலின் முதற்பிரதியை 'தமிழ் மணி', 'தேசத்தின்கண்', வாழ்நாள் சாதனையாளர் மானா மக்கீன் பெற்றுக்கொள்ளவுள்ளார். '

இலக்கிய மாமணி' பதுளை சாரணா கையூம், மொஹமட் எஸ் முகுசீன், கல்ஹின்னை ஃபஹ்மி ஹலீம்டீன், கவிஞர் கலைக்கமல், பன்னூலாசிரியர் ரிம்ஸா மொஹமட், பன்னூலாசிரியர் திருமதி.எச்.எப்.ரிஸ்னா, உதவிக்கல்விப் பணிப்பாளர் கே.யோகேஸ்வரன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளனர்.

# மாத்தளை பாக்கியம் தேசிய கல்லூரியின் நூற்றாண்டு விழா

**மாத்தளை சுழற்சி நிருபர்**

மாத்தளை பாக்கியம் தேசிய கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைப்பவனி இன்று 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு மாத்தளை நகரில் இடம்பெறவுள்ளது. மாத்தளை மாவட்டத்தில் அமைந்திருக்கும் ஒரே ஒரு தமிழ் பெண்கள் பாடசாலையான பாக்கியம் தேசியக் கல்லூரி 2027 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒன்பதாம் திகதி நூற்றாண்டு விழா காணவுள்ளது. இதனை முன்னிட்டு நடைப்பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பாடசாலையின் பழைய மாணவிகள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினால் இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# பதுளையில் இ.தே.தோ.தொழிலாளர் சங்கத்தின் தொழிலாளர் தினம்

இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் தொழிலாளர் தினம் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தலைமையில் இடம்பெறவுள்ளது

01.05.2023 அன்று காலை 9.00 மணிக்கு பதுளை பஸ் நிலையத்திற்கு முன்பாக பேரணி ஆரம்பிக்கப்பட்டு நடைபவனியாக பதுளை வெலேகடை வரை சென்று அங்கு தொழிலாளர் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவு நிர்வகிப்பு வழிமுறையை வலுப்படுத்த

# நீர்கொழும்பு மீள்சுழற்சி சமூகம் நிறுவப்பட்டது



Negombo Recycling Club (NRC) என்ற பெயரில் ஒரு விரிவான பொருள் மீட்பு வசதி (Material Recovery Facility MRF) 2023 ஆம் ஆண்டு மார்ச் 22 ஆம் திகதி சர்வ தேச மீள்சுழற்சி தினத்துடன் சுற்றுச்சூழல் அமைச்சின் செயலாளர் டொக்டர் அனில் ஜாசிங்கவின் பங்கேற்புடன் உத்தியோகப்பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. MRF ஆனது, CocaCola இன் பரோபகாரப் பிரிவான The CocaCola Foundation (TCCF) மற்றும் இலங்கையின் மிகப்பெரிய பிளாஸ்டிக் மீள்சுழற்சி நிறுவனமான Eco Spindles ஆகியவற்றால் நிதியளிக்கப்பட்டது. இது Janathakshan (GTE) Ltd என்ற இலாப நோக்கற்ற அமைப்பால் செயல்படுத்தப்பட்டது.

NRC இன் நோக்கம் நீர்கொழும்பில் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுகளை சேகரிக்கும் செயல்முறையை வலுப்படுத்துவதன் மூலம் PET பிளாஸ்டிக் உள்ளிட்ட கழிவுகளை சேகரித்து மீள்சுழற்சி செய்வதன் மூலம் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை உறுதி செய்வதாகும். நீர்கொழும்பு ஒரு முக்கிய வர்த்தக மையமாகவும், மேல் மாகாணத்தில் மிகவும் பிரபலமான சுற்றுலா தலமாகவும் உள்ளது. எவ்வாறாயினும் பொறுப்பற்ற விதத்தில் வீதிகளில் கொட்டப்படும் கழிவுகளை அகற்றுவது மற்றும் சீராக கொட்டப்படும் கழிவு நிர்வகிப்பு நடைமுறைகள் இல்லாதது நமது சுற்றுச்சூழலில் கடுமையான எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இந்தச் சிக்கலைத் தீர்க்க, NRC மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்களைப் பிரித்தெடுத்து, மீள்சுழற்சி செய்பவர்களுக்கு அனுப்பும் முன் கழிவுகளை நசுக்கி சிறிதாக்குவதன் மூலம் மதிப்பு கூட்டுதல் செயல்முறைக்கு உட்படும்.

Eco Spindles போன்ற மீள்சுழற்சி செய்பவர்களிடமிருந்து கழிவுகளை கச்சிதமான நசுக்கி மற்றும் துகள்களாக மாற்றுவதன் மூலம் NRC அதிக வருவாய் ஈட்டுகிறது. MRFகள், கழிவு சேகரிப்பாளர்களின் வலையமைப்பிற்கு சாதாரண கட்டணத்தை விட சுமார் இருமடங்காக செலுத்துகின்றன. NRC ஆனது "வாங்குதல்" மையமாக செயல்படுகிறது, உள்ளூர் சமூகங்கள் தங்கள் மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்களை நேரடியாக MRF க்கு விற்க வழிவகுக்கிறது.

தினகரன் வர்த்தக உலா

## இலங்கை தாய்லாந்து வர்த்தக சபையின் 21வது வருடாந்த பொதுக்கூட்டம்



**(ருசைக் பாரூக்)**

இலங்கை தாய்லாந்து வர்த்தக சபையின் 21வது வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் கொழும்பு மெல்பேர்ன் விதி " சியாம் ஹவுஸில் " நடைபெற்றது.

2023/2024 ஆம் ஆண்டிற்கான செயற்குழுவிற்கு பின்வருபவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

ஆசிம் முக்தார் (பொருளாளர்), கமில் வீரசேகர (துணைத் தலைவர்), ரிசான் நசீர் (முன்னாள் தலைவர்), துஷ்யந்த பஸ்நாயக்க (தலைவர்), போஜ் ஹரன்போல் (இலங்கைக்கான தாய்லாந்து தூதுவர்), லயோனல் பெர்னாண்டோ (முன்னாள் தலைவர்), லலித் குமாரகே (முன்னாள் தலைவர்), ஏ. எம். முசாஜீ (துணைத் தலைவர்), பிரியந்த கொலன்னகே (செயலாளர்)

யசோதா பீரிஸ் (உதவி பொருளாளர்), அப்துல் சாலிஹீன் (குழு உறுப்பினர்), வேணுர பெர்னாண்டோ (குழு உறுப்பினர்), ஆர்த்தித் பிரசார்ட்குல் (ஆலோசகர்), றியன்சி பெர்னாண்டோ (குழு உறுப்பினர்), சந்தன நாணயக்கார (குழு உறுப்பினர்), தோங்க்ரோட் (தூதரக முதல் செயலாளர்)

# 'இலங்கைக்கான தூய்மையான கடற்படுகைகள்' என்ற குறிக்கோளை அடைய புதிய திட்டம்




ஜோன் கீல்ஸ் குழுமத்தின் சமூக தொழில் முனைவோர் திட்டமான பிளாஸ்டிக்சைக்கிள், இலங்கையில் கடல்வாழ் உயிரினங்கள் மற்றும் கடல் சுற்றுச்சூழல் அமைப்பைப் பாதுகாக்கும் இளைஞர்கள் தலைமையிலான கடல் பாதுகாப்பு அமைப்பான த பேர்ல் புரொடெக்கடர்ஸ் உடன் ஒப்பந்தம் செய்து கொண்டது.

இலங்கையைச் சுற்றி அமைந்துள்ள உணர்திறன் வாய்ந்த கடல் சுற்றுச்சூழல் அமைப்புகள் மற்றும் பாறைகளில் இருந்து நீருக்கடியில் உள்ள கடல் குப்பைகளை அகற்றும் திட்டம். "இலங்கைக்கான தூய்மையான கடற்படுகைகள்" என்ற தலைப்பிலான இந்த பயணத்திற்கான இந்த கூட்டாண்மையானது, இலங்கையில் பிளாஸ்டிக் மாசுபாட்டைக் கணிசமாகக் குறைப்பதில் ஒரு வினையூக்கியாக இருக்க வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையுடன் தொடங்கப்பட்ட பிளாஸ்டிக்சைக்கிளின் பயணத்தின் மற்றுமொரு படியாக விளங்குகிறது.

தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை (NARA) நடத்திய ஆய்வின்படி, இலங்கையின் மேற்கு மாகாணத்தில் உள்ள 80% கடற்படுகை மாசுபட்டதாகக் கருதப்படுகிறது.

இந்த மாசுபாட்டிற்குக் காரணம், இலங்கையின் 25% க்கும் அதிகமான மக்கள் தீவின் கடற்கரைக்கு அருகாமையில் வசிப்பதுடன் வீடுகள் மற்றும் தொழிற்சாலைக் கழிவுகள் கடலுக்குள் செலுத்தப்படுவதன் விளைவுமாகும். இந்த கழிவுகளிலிருந்து, 15% மட்டுமே நீரின் மேற்பரப்பில் மிதக்கிறது, மீதமுள்ளவை கடல் தரையில் மூழ்கிவிடுகின்றன. உலகளவில், நைலான் வலைகள் போன்ற தொலைந்து போன அல்லது கைவிடப்பட்ட மீன்பிடி சாதனங்கள் போன்ற சுமார் ஒரு மில்லியன் தொன் 'கோஸ்ட் கியர்' இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் உலகெங்கிலும் உள்ள 550 வகையான கடல் உயிரினங்களுக்கு காயம் மற்றும் இறப்பு ஏற்படுகிறது.

இந்த ஆபத்தான புள்ளிவிவரங்களை கருத்தில் கொண்டு, த பேர்ல் புரொடெக்ட்டர்ஸ் இலங்கை பயணத்திற்காக தூய்மையான கடற்படுகைகளை அறிமுகப்படுத்தியது.

# வெற்றிகரமாக நடந்த ஈராண்டு விளையாட்டு விழா



இலங்கை பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனமும் (PA) ஐக்கிய தென்னிந்திய பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளன விளையாட்டு கழகமும் (UPASI SC) இணைந்து ஈராண்டுக்கோர் முறை நடாத்தப்படும் விளையாட்டு விழாவை வெற்றிகரமாக நடாத்தி முடித்தனர். மூன்று தசாப்தங்களுககும் மேலாக ஈராண்டுக்கோர் முறை நடாத்தப்படும் இவ்விளையாட்டு விழாவில் கிரிக்கட், கோல்ப், (GOLF) டென்னிஸ், பூப்பந்து (Badminton) மற்றும் பில்லியர்ட்ஸ்/ஸ்னூக்கர் ஆகிய ஐந்து விளையாட்டுகள் உள்ளடங்கியுள்ளன.

UPASI விளையாட்டு கழகத்தின் உயர்மட்ட குழு 2019ல் வருகைதர திட்டமிடப்பட்டிருந்தெனினும் கோவிட் பெருந்தொற்று காரணமாக விதிக்கப்பட்ட பயணத்தடையினால் இவ்விளையாட்டு விழா 2023ம் ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டது. எனவே இவ்விரு சங்கங்களும் மிகவும் எதிர்பார்க்கபட்ட இவ்விளையாட்டு விழாவில் மீண்டும் இணைவதில் பெருமகிழ்ச்சியடைந்தனர்.

இலங்கை பெருந்தோட்ட குழு (RPC) கோல்ப் (GOLF) விளையாட்டில் தமது திறமையை வெளிக்காட்டி 20 வருடங்களுக்கு பிறகு விருதை தனதாக்கியது.

இவ்விளையாட்டில் தரிந்து விக்ரமசிங்க மிக திறமையாக விளையாடி ஒட்டுமொத்த அணிக்கான விருதை பெற்று தந்ததுடன் 'Stable Ford' விருதையும் வென்றார். அத்துடன் இவ்விளையாட்டு விழாவில் இலங்கை பெருந்தோட்ட குழு கிரிக்கட் மற்றும் பூப்பந்து (Badminton) விளையாட்டுகளிலும் வெற்றி பெற்றது.

கிரிக்கட் விளையாட்டின் சிறப்பு அம்சமாக துடுப்பாட்ட வீரர் சத்துர பண்டார தனது மிக சிறந்த துடுப்பாட்டத்தினால் சதம் பெற்றதுடன் 'சிறந்த துடுப்பாட்ட வீரர்' ஆட்ட நாயகன் ஆகிய விருதுகளை வென்றார்.

அடுத்த ஈராண்டுக்கான விளையாட்டு விழாவை எதிர்பார்ப்பதுடன் அவ்விழாவிலும் ஐக்கிய தென்னிந்திய பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துக்கான (UPASI SC) தமது பங்களிப்பு தொடரும் என இலங்கை பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளன (PA) தலைவர் சேனக்க அலவத்தேகம தெரிவித்தார்.

ரதல்ல கிரிக்கட் மைதானம்; ரோயல் கொழும்பு கோல்ஃப் கழகம், தரவளை கழகம் ஆகியன இவ்விளையாட்டு விழாவினை ஐந்து நாட்கள் நடாத்த உதவின.

# சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முன்னெடுப்பு



Stop Child Cruelty Trust மற்றும் Child Protection Alliance (CPA) ஆகியன ஒன்றிணைந்து, இலங்கை முழுவதும் உள்ள சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் ஏதுவாக மற்றுமொரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வை ஆரம்பித்துள்ளன. 2020 முதல் 2022 வரை, பதினேழு சிறுவர்கள் உடல் ரீதியாக, பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர்.

நாட்டில் நிலவும் சிறுவர் பாதுகாப்பு நெருக்கடியைத் தீர்க்க எந்தவொரு அதிகார மட்டமும் அர்த்தமுள்ள எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. 'உள்ளங்களை உலுக்கும் உண்மைக் கதைகள்' என்பது பல்வேறு வடிவங்களிலான சிறுவர் துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டவர்கள்,உயிர் பிழைத்தவர்களின் உண்மைக் கதைகளின் தொகுப்பாகும். அதிகரித்து வரும் நெருக்கடி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடப்படும். இந்த தலைசிறந்த படைப்பின் அறிமுகமாக வெளியான முதல் இதயத்தை நொருங்கச் செய்யும் கதையான 'விழிகளுக்கு கண்ணீரால் விடைகொடுத்து உதிர்ந்து போனது வெண் மலர்' என்பது காணப்படுகின்றது.

'விழிகளுக்கு கண்ணீரால் விடை கொடுத்து உதிர்ந்து போனது வெண் மலர்' என்பது பதினாறு வயது நிரம்பிய வருணியின் சோகக் கதையாகும். அவர் தனது சொந்த வாழ்க்கையை போக்கிக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில், அதிபரால் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு உள மற்றும் வாய்மொழி துஷ்பிரயோகத்திற்கு ஆளானார். இந்த சம்பவத்தைப் பற்றி வைத்தியர் துஷ் விக்கிரமநாயக்க கருத்தினைப் பகிர்ந்து கொள்கையில்,

"இந்த புத்தகத்தின் மிகவும் தனித்துவமான விடயம் என்னவென்றால், தேசிய பாடசாலைகளுக்கிடையேயான விவாதப் போட்டியில், சிறந்த பேச்சாளர் விருதை வென்ற இளம் தினிதி குணதிலக அவர்களால் இப்புத்தக்கம் எழுதப்பட்டுள்ளது. கொழும்பு 7, சிறிமாவோ பண்டாரநாயக்க வித்தியாலயத்தின் விவாத அணியின் தலைவியாக தினிதி இருந்தார்," என்று கூறினார்.

வைத்தியர் விக்கிரமநாயக்க தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில், "வளர்ந்தவர்களிடமிருந்து பாதுகாப்பு தேவைப்படும் சமூகத்தின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய உறுப்பினர்களாக சிறுவர்கள் காணப்படுகின்றனர். துஷ்பிரயோகத்திற்கு எளிதான இலக்காக சிறுவர்கள் இருப்பதால், சிறுவர்கள் தொடர்பான அதிர்ச்சிகரமான சம்பவங்கள் உலாவருவதைப் பார்ப்பது நம்பமுடியாத அளவிற்கு மன தைரியத்திற்கு சவால் விடுகிறது. என்று குறிப்பிட்டார்.

# செலிங்கோ லைஃப் 22வது 'பிரணாம' புலமைப்பரிசில் திட்டத்திற்கான விண்ணப்பங்களைக் கோருகின்றது



செலிங்கோ லைஃப், தொடர்ந்து 22வது வருடமாக திறமைவாய்ந்த இளம் இலங்கையர்கள் மத்தியில், தகுதியுடைய மேலும் 160 பேர் பிரணாம புலமைப்பரிசில்களை வெற்றிகொள்வது தொடர்பில் தனது தேடலை, ஆயுட்காப்புறுதி முதல்வரின் முதன்மை வெகுமதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆரம்பித்துள்ளது.

நிறுவனமானது, 4 திட்டத்தின்கீழ் வழங்கப்படும் இந்தப் புலமைப்பரிசில்களுக்கான விண்ணப்பங்களை, 2023 மார்ச் 1 முதல் 2023 மே 31 வரை, நாடளாவிய ரீதியில் காணப்படும் தனது கிளைகளின் மூலம் ஏற்றுக்கொள்ளும் என அறிவித்துள்ளது. 2023 'பிரணாம' புலமைப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வினை ஆகஸ்ட் மாதம் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வருடமும், ரூ.11 மில்லியன் மொத்த பெறுமதியுடைய புலமைப் பரிசில்கள், கல்வி, விளையாட்டு, கலை மற்றும் பிறசிறப்புத்திறன் செயற்பாடுகளில் அதிவிசேட திறமைகளை வெளிப்படுத்திய செலிங்கோ லைஃப் ஒப்பந்ததாரர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படவுள்ளதாக நிறுவனம் அறிவித்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ் இதுவரை, ரூ.177 மில்லியன் பெறுமதியான மொத்தத்தொகை 3034 மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. செலிங்கோ லைஃப், 'பிரணாம' புலமைப்பரிசில்களின் புதிய பதிப்பின்கீழ், மொத்தத் தொகையினை ரூ.188 மில்லியனாகவும் பயனாளர்களின் எண்ணிக்கையினை 3194 ஆகவும் அதிகரிக்கவுள்ளது.

22வது 'பிரணாம' புலமைப்பரிசில்கள் நிகழ்ச்சித்திட்டமானது 2022ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சிறப்பான முறையில் சித்திபெற்ற 25 மாணவர்களுக்கு தலா ரூ. 120,000 வீதம், 5 வருட தவணைகளில் வெகுமதியாக வழங்கவுள்ளது. அத்துடன், இத்திட்டத்தின் மூலம், 2021 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தர பரீட்சைகளில் சிறப்பான முறையில் சித்திபெற்ற 25 மாணவர்கள் தலா ரூ. 84,000 வீதம், மாதாந்தம், 2 வருட காலத்திற்கு பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

# கொமர்ஷல் வங்கி கார்ட் வைத்திருப்போருக்கு 50 வீதம் வரையான கழிவுகள்

மலரும் புத்தாண்டு காலப்பகுதியில் கொமர்ஷல் வங்கியின் கிரடிட் மற்றும் டெபிட் கார்ட் வைத்திருப்பவர்கள் 3500க்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்களில் இருந்து 50 வீதம் வரையான கழிவுகளைப் பெற்றுக் கொள்ள உள்ளனர். 2023 புத்தாண்டை முன்னிட்டு மேலும் பல இலகு தவணை கொடுப்பனவு முறைகளும் இவர்களுக்குக் கிடைக்கவுள்ளன.

கொமர்ஷல் வங்கியின் கார்ட்டுகளுக்கான நாட்காட்டியில் பிரதான நிகழ்வாக குறிப்பிடப்பட்டுள்ள இந்த பருவ கால திட்டத்தின் மூலம் பல்வேறு வகையான புத்தாண்டு கால தேவைகள், புத்தாண்டுக்கான பரிசுப் பொருள் கொள்வனவுகளுக்கான தயார் படுத்தல் என்பனவற்றை மார்ச் மாதம் 15ம் திகதி முதல் ஏப்பிரல் மாத இறுதி வரை குறிப்பிட்ட தினங்களில் அல்லது காலப்பகுதியில் நாடு முழுவதும் உள்ள இந்தத் திட்டத்தின் பங்காளி நிறுவனங்கள் மூலமாக நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

அதேநேரம் குறிப்பிட்ட இக்காலப்பகுதியில், கிரடிட் கார்ட் கொள்வனவுகளுக்கு 24 மாதங்கள் வரையான விஷேட இலகு தவணைக் கொடுப்பனவுத் திட்டமும் அமுல் செய்யப்படவுள்ளதாக வங்கி தெரிவித்துள்ளது. இந்த இலகு தவணை கொடுப்பனவு திட்டத் தெரிவுகள் வர்த்தக நிறுவனங்களுக்கு இடையில் வித்தியாசப்படும்.

330 வர்த்தக நிறுவனங்கள் கொமர்ஷல் வங்கியின் டெபிட் மற்றும் கிரடிட் கார்ட்களுக்கு கழிவுகளை வழங்கவுள்ளன. இதில் 172 ஆடை வகைகள் மற்றும் நவநாகரிக உதிரிப் பொருள் நிலையங்கள், ஒன்பது காலணிகள் மற்றும் தோல் உற்பத்திப் பொருள் நிலையங்கள், 13 நகை நிலையங்கள், 31 வாழ்வுமுறை களஞ்சிய நிலையங்கள், ஒன்பது சலூன்கள், ஸ்பா மற்றும் அலங்கார நிலையங்கள், நான்கு கைக்கடிகார மற்றும் உதிரிப் பொருள் நிலையங்கள், 73 இணைய வழி வர்த்தக நிலையங்கள், ஐந்து சுப்பர்மார்க்கெட்கள், ஒன்பது சுகாதார பராமரிப்பு சேவை நிலையங்கள்;, 11 வாகனப் பங்காளிகள், இரண்டு புத்தக விற்பனை நிலையங்கள், நான்கு உணவகங்கள் என்பன அடங்கும்.

# நகர்வலம்



# சூடான் மோதலுக்குள் சிக்குண்டிருந்த மேலும் 195 பேர் பாதுகாப்பாக மீட்பு







சூடானின் மோதலுக்கு மத்தியில் சிக்குண்டிருந்த மேலும் 195 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டு 'மன்னர் மக்கா' கப்பலில் நேற்று காலையில் ஜித்தா நகருக்கு வந்து சேர்ந்துள்ளனர். அவர்களில் இலங்கையர் உட்பட 15 நாடுகளது பிரஜைகள் அடங்கியுள்ளனர் என்று இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், சவூதி அரேபிய அரசானது அதன் தலைமைத்துவத்தின் வழிகாட்டுதலின் கீழ், சூடானில் சிக்கித்தவிக்கும் பல்வேறு நாட்டினரையும் வெளியேற்றும் முயற்சியின் தொடர்ச்சியாக, மேலும் பல சகோதர மற்றும் நட்பு நாடுகளைச் சேர்ந்த சுமார் 195 பேர் சவூதி அரேபிய கப்பல் "மன்னர் மக்கா" மூலம் வெள்ளிக்கிழமை காலையில் ஜித்தா நகரை வந்தடைந்துள்ளனர். அவர்களில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பாலஸ்தீனம், தாய்லாந்து, மொரிட்டானியா, அமெரிக்கா, போலந்து, ஐக்கிய இராச்சியம், ஆஸ்திரியா, இந்தோனேசியா, கனடா, ஈராக், எகிப்து, ஆஸ்திரேலியா, சிரியா ஆகிய நாடுகளின் பிரஜைகள் அடங்கியுள்ளனர்.

இவ்வாறு அழைத்து வரப்படும் வெளிநாட்டு பிரஜைகள் தத்தமது நாடுகளுக்குப் புறப்படுவதற்குத் தயாராகும் வகையில் அவர்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுப்பதில் சவூதி அரேபியா காட்டி வரும் ஆர்வத்தை தூதுவர் உறுதிப்படுத்தினார். சூடானில் சிக்குண்டுள்ள வெளிநாடுகளது பிரஜைகளை பாதுகாப்பாக வெளியேற்றும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இருந்து இதுவரை 80 நாடுகளைச் சேர்ந்த 2991 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர். அவர்களில் 119 சவூதி பிரஜைகளாவர். 2872 பேர் ஏனைய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



அலரிமாளிகையில் அண்மையில் நடைபெற்ற இப்தார் நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் கட்சி அமைப்பாளர் மொஹிட் அமீர், எம். முஸ்லி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## சூடானிலுள்ள வெளிநாட்டு பிரஜைகளை மீட்கும் சவூதியின் பணிகள் பாராட்டத்தக்கவை



சூடானின் உள்நாட்டு மோதலுக்குள் சிக்குண்டுள்ள வெளிநாட்டு பிரஜைகளைப் பாதுகாப்பாக மீட்டெடுத்து ஜித்தாவுக்கு அழைத்துவரும் சவூதி அரேபியாவின் மனிதாபிமானப் பணிகள் என்றும் பாராட்டப்பட வேண்டியவை என்று இலங்கை அல் ஹிக்மா நலன்புரிச் சங்கத்தின் பணிப்பாளர் மௌலவி அஷ் ஷைக் ஷேஹுதீன் முஹம்மத் ஹஸன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, சூடானின் உள்நாட்டு போரில் சிக்குண்டுள்ள வெளிநாட்டு பிரஜைகளைப் பாதுகாப்பாக மீட்டு ஜித்தாவுக்கு அழைத்து வரவென சவூதி அரேபியா இரவு பகலாகப் பணியாற்றுகின்றது. இதன் நிமித்தம் அந்நாட்டின் விஷேட விமானங்கள், விமானப் படை விமானங்கள், கப்பல்கள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. சவூதி அரேபிய அரசின் தலைமைத்துவ வழிகாட்டலின் கீழ் முன்னெடுக்கப்படும் இந்த மனிதாபிமானப் பணியில் அந்நாட்டின் இராணுவத்தினர் உள்ளிட்ட அனைத்து படையினரும் ஏனைய உத்தியோகத்தர்களும் மிகுந்த அர்ப்பணிப்புகளோடு பணியாற்றி வருகின்றனர். இத்திட்டத்தின் கீழ் இற்றை வரையும் சவூதி அரேபியா, இலங்கை உட்பட 67 நாடுகளைச் சேர்ந்த 2350 க்கும் மேற்பட்ட பிரஜைகள் சூடானில் இருந்து ஜித்தாவுக்கு பாதுகாப்பாக அழைத்து வரப்பட்டுள்ளனர். இவ்வாறு அழைத்து வரப்பட்டு தங்க வைக்கப்பட்டுள்ளவர்களை அவரவர் நாடுகளுக்கு பாதுகாப்பாக அனுப்பி வைப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் சவூதி அரேபியா முன்னெடுத்து வருகின்றது.

அந்த வகையில் சூடானில் இருந்து ஜித்தாவுக்கு அழைத்து வரப்பட்டுள்ள இலங்கையரை இங்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியுடனும் சவூதி அரேபியாவிலுள்ள இலங்கை தூதரகத்துடனும் கலந்துரையாடி மேற்கொள்ளப்பட்டுள்ளன. சவூதி அரேபியாவின் இந்த மனிதாபிமானப் பணிகளைப் பாராட்டியுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சவூதி அரேபியாவுக்கு நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டுள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## தென்னாபிரிக்கா சுதந்திர தின வைபவம்



தென்னாப்பிரிக்காவின் சுதந்திர தின வைபவம் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இலங்கைக்கான தென்னாபிரிக்காவின் உயர்ஸ்தானிகர் சென்டில் எட்வின் ஷால்க் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ பிரதம அதிதியாக கலந்து கொண்டார். சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, இராஜதந்திரிகள் மற்றும் தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகராலய ஊழியர்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர். ருஸைக் பாரூக்





கொழும்பு15, மேல் செயின்ட் அன்ட்ரூஸ் வீதியில் உள்ள கொழும்பு மாநகர சபையின் (CMC) முதல் தமிழ் மொழி மூலமான இலவச முன்பள்ளி மாணவர்களுக்கு சுமார் 85,000 ரூபாய் மதிப்புள்ள எழுது பொருட்கள் மற்றும் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டன. முகத்துவாரம் தமிழ் மொழி மூலமான இலவச முன்பள்ளியை ஆரம்பிக்க உறுதுணையாக இருந்த முன்னாள் கொழும்பு மாநகர சபை உறுப்பினரும் முன்பள்ளி நிலையியற்குழுவின் தலைவருமான துஷார மணம்பேரிக்கு முன்னாள் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் காயத்ரி நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மாதாந்தம் நடாத்தும் "மறைந்தும் மறையாதவர்கள்" எனும் இசை நிகழ்ச்சி (27) வியாழக்கிழமை மாலை ஆனந்த சமரகோன் கலையரங்கத்தில் நடைபெற்ற போது நிகழ்வில் சிறப்பு அதிதியாக கலந்து சிறப்பித்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசனை சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமர் பாடகர் சந்திரகுமார் கந்தனாரச்சிக்கு பரிசு வழங்குவதையும் நிறுவனத்தின் உயர் அதிகாரிகளையும் பார்வையாளர்களையும் படங்களில் காணலாம்.



தமிழ்ச்சங்கத் பொதுச்செயலாளர் ஆ. கந்தசாமி, சங்கீத கலாவித்தகர் சுபாஷாமினி கந்தசாமி தொகுப்பில் நூல் உருவாக்கம் பெற்ற " தமிழர் செவ்வியல் இசைப்பா வடிவங்கள் " நூல் அறிமுக விழா அண்மையில் நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்ற மண்டபத்தில் மன்றத்தலைவர் பொ. ஜெயராமன் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக கம்பன் கழக அமைப்பாளர் கம்பவாரிதி இ. ஜெயராஜ் கலந்து கொண்டார்.

## ஜி 20 உச்சி மாநாட்டுக்கான நகர்வுகளில் தொய்வோ அவநம்பிக்கையோ கூடாது

### இந்தோனேசிய தூதுவர் தெரிவிப்பு; செயற்பாடுகளில் திருப்தி

ஜி 20 உச்சி மாநாடு இந்தியாவின் தலைமையில் எதிர்வரும் செப்டெம்பரில் புதுடில்லியில் நடக்கவிருப்பதால் அதை நோக்கிய இந்திய முன்நகர்வுகளில் எந்த தொய்வும் அவநம்பிக்கையும் இருக்கக்கூடாது என்று இந்தியாவுக்கான இந்தோனேசிய தூதுவர் இனா கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

'உலகளாவிய இந்திய பார்வைகள்' என்ற மகுடத்தில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோது இவ்வாறு தெரிவித்த அவர், இந்தியா பொறுப்பேற்ற கடந்த நான்கரை மாதங்களில் சக்திவளம் மற்றும் டிஜிட்டல் துறைகளில் நிலைமாற்றங்களுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதைக் காண முடிவதாகவும் இந்திய நகர்வுகளில் ஒரு முழுமைத்தன்மையை அவதானிக்க முடிவதாகவும் குறிப்பிட்டார்.

சமீபத்தில் பெங்களூரில் நடைபெற்ற ஜி 20 நிதியமைச்சர் மாநாட்டிலும், வெளிவிவகார அமைச்சர் மாநாட்டிலும் கூட்டறிக்கைகளை வெளியிட முடியாத நிலை தோன்றியது. உக்ரைன் யுத்தம் தொடர்பிலான பொது நிலைப்பாட்டுக்கு வர முடியாத நிலை ஏற்பட்டதாலேயே கூட்டறிக்கை தயார்செய்ய முடியாமற்போனது.

இதை குறிப்பிட்ட கிருஷ்ணமூர்த்தி, தமது நாடு தலைமை ஏற்றிருந்தபோதும் தமது நகர்வுகள் உச்சிமாநாட்டை நோக்கியதாக மட்டுமே இருந்ததாகவும் அது தொடர்பாக நடத்தப்பட்ட மாநாடுகளின் வெற்றி தோல்விகள் பற்றி இந்தோனேசியா அக்கறை கொள்ளவில்லை என்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

இம் மாநாட்டில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய ஐ.நா.வின் இந்தியாவுக்கான வதிவிட பிரதிநிதி ஷொம்பி ஷார்ப், நாடுகள் பிரிந்து கிடக்கும் இச்சந்தர்ப்பத்தில் இந்நாடுகளை ஒருங்கிணைக்கும் வகையில் சாதகமானதும் ஆக்கபூர்வமானதுமான பணிகளை செய்துமுடிக்கும் வல்லமையுடன் இந்தியா காணப்படுவதாக குறிப்பிட்டார்.

## ஐரோப்பா விளையாடும் களமல்ல

### –டச்சு பிரதமர்

அமெரிக்காவின் நட்பு நாடு என்பதற்காக பிரான்ஸ் ஒருபோதும் அமெரிக்காவின் அடிமையாக இருக்கப்போவதில்லை என்றும் வொஷிங்டன் அல்லது பீஜிங்கை பின்பற்றிச் செல்லும் கண்டமாக ஐரோப்பா இருக்காது என்றும் பிரெஞ்சு அதிபர் இம்மானுவேல் மெக்ரொன் நெதர்லாந்து விஜயத்தில் வெளியிட்ட கருத்துகள் மேகத்திய அரசியலில் அதிர்வை ஏற்படுத்தி இருப்பதாக ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

2 நாள் விஜயம் மேற்கொண்டு நெதர்லாந்து விஜயம் மேற்கொண்டிருந்த அவர் ஊடகங்களுக்கு கருத்து வெ ளியிட்டபோது, தாய்வான் விவகாரத்தில் சமாதான தீர்வு எட்டப்பட வேண்டும் என்றும் பழைய நிலையே தாய்வானில் மாற்றமின்றி நீடிக்க வேண்டுமென்றும் தெரிவித்ததோடு. அமெரிக்காவை ஆதரிக்கும் நாடு என்பதற்காக ஐரோப்பா சொந்தமாக சிந்திக்கும் திராணியற்றது என்பது இதன் பொருள் ஆகாது என்றும் கூறினார்.

மெக்ரொனின் இவ்விஜயம் 23 வருடங்களின் பின்னரான ஒரு பிரெஞ்சு ஜனாதிபதியின் ஆம்ஸ்ட்ரடாம் பயணமாக அமைந்திருந்தது.

பிரெஞ்சு ஜனாதிபதியின் கூற்றுகள் தொடர்பாக தன் அபிப்பிராயத்தை வெளியிட்டிருந்த முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், எனது நண்பரான மெக்ரொன் சீனாவின் பின்புறத்தை முத்தமிடுகிறார் என்று தெரிவித்ததற்கு பதிலளித்த மெக்ரொன், தான் அதுபற்றி கருத்து கூற விரும்பவில்லை என்றும் விவகாரங்கள் சூடுபிடிப்பதறுற்கு அவரும் ஒரு காரணம் என்றும் தெரிவித்திருந்தார்.

மெக்ரொனின் கருத்துகளுக்கு சார்பாக பேசிய டச்சு பிரதமர் மார்க் ருட்டே, உலக விவகாரங்களில் ஐரோப்பா ஒரு பங்காளராக இருக்குமே தவிர ஐரோப்பா ஒரு விளையாடும் களமாக இருக்காது என்றும் எனினும் பாதுகாப்பு மற்றும் சுதந்திரம் என்று வரும்போது வொஷிங்டன் எமது சிறந்த நண்பராக விளங்கும் என்றும் தெரிவித்தார்.

# இலங்கைக்கு 100ஆவது டெஸ்ட் வெற்றி



அயர்லாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இன்னிங்ஸ் மற்றும் 10 ஓட்டங்களால் வெற்றியீட்டிய இலங்கை அணி டெஸ்ட் வரலாற்றில் தனது 100ஆவது வெற்றியை பதிவு செய்துகொண்டது.

1982 ஆம் ஆண்டு முதல் டெஸ்ட் போட்டியில் ஆடிய இலங்கை அணி இதுவரை 311 போட்டிகளில் ஆடிய நிலையிலேயே தனது 100 ஆவது டெஸ்ட் வெற்றியை பதிவு செய்துள்ளது. இலங்கை அணி இதுவரை 119 போட்டிகளில் தோல்வி அடைந்திருப்பதோடு 92 போட்டிகளை சமநிலை செய்துள்ளது.

டெஸ்ட் வரலாற்றில் 100 வெற்றிகள் என்ற மைல்கல்லை எட்டிய எட்டாவது அணி இலங்கையாகும்.

காலி சர்வதேச மைதானத்தில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியின் ஐந்தாவது மற்றும் கடைசி நாளான நேற்று இன்னிங்ஸ் தோல்வி ஒன்றை தவிர்க்க 212 ஓட்டங்களை பெற வேண்டிய நெருக்கடியுடனேயே அயர்லாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்தது. எனினும் இலங்கை பந்துவீச்சாளர்கள் முன் விக்கெட்டுகளை காத்துக்கொள்ள அயர்லாந்தினால் முடியாமல்போனது. இதில் வலது கை சுழற்பந்து வீச்சாளர் ரமேஷ் மெண்டிஸ் அபாரமாக செயற்பட்டு ஐந்து விக்கெட்டுகளை பதம்பார்த்ததோடு பிரபாத் ஜயசூரிய 2 விக்கெட்டுகளை வீழ்த்தி இந்தப் போட்டியில் மொத்தமாக ஏழு விக்கெட்டுகளை சாய்த்தார்.

அயர்லாந்து அணி 54 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை இழந்த நிலையிலேயே நேற்று தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்தது. எனினும் அந்த அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுக்க 103 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்தது.

எனினும் ஒருமுனையில் சிறப்பாக ஆடிய ஹரி டெக்டோர் 189 பந்துகளுக்கு முகம்கொடுத்து 8 பௌண்டரிகள் மற்றும் 3 சிக்ஸர்களுடன் 85 ஓட்டங்களை பெற்றார். தவிர அணித்தலைவர் அன்டி பல்பிரினி 46 ஓட்டங்களை குவித்தார் வேறு எந்த வீரரும் 20 ஓட்டங்களைக் கூட எட்டவில்லை.

இந்த டெஸ்ட் போட்டியில் அயர்லாந்து அணி முதல் இன்னிங்ஸில் சிறப்பாகச் செயற்பட்டு 492 ஓட்டங்களை பெற்றபோதும் இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸில் 704 ஓட்டங்களை பெற்றதால் அந்த அணியால் இரண்டாவது இன்னிங்ஸில் சமாளிக்க முடியாமல்போனது.

2018 ஆம் ஆண்டு 11 ஆவது டெஸ்ட் ஆடும் நாடாக பதிவான அயர்லாந்து இதுவரை 6 டெஸ்ட் போட்டிகளில் ஆடியபோதும் அவை அனைத்திலும் தோல்வியையே சந்தித்துள்ளது.

## 71 ஆண்டு சாதனையை முறியடித்தார் ஜயசூரிய



அயர்லாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் மொத்தம் ஏழு விக்கெட்டுகளை விழ்த்திய பிரபாத் ஜயசூரிய குறைந்த போட்டிகளில் 50 விக்கெட்டுகளை வீழ்த்திய சுழற்பந்து வீச்சாளர் என்ற சாதனை படைத்துள்ளார்.

காலியில் நடைபெற்ற டெஸ்டின் இறுதி நாளான நேற்று (28) அயர்லாந்தின் பொல் ஸ்டர்லிங்கின் விக்கெட்டை சாய்த்த போதே அவர் 50 விக்கெட் என்ற மைல் கல்லை எட்டி 71 ஆண்டு சாதனையை முறியடித்தார்.

ஜயசூரிய தனது ஏழாவது போட்டியிலேயே 50 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். மேற்கிந்திய தீவுகளின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் அல்ப் வலடின் 1952 இல் 8 டெஸ்ட் போட்டிகளில் 50 விக்கெட்டுகளை எட்டிய சாதனையையே அவர் முறியடித்தார்.

எனினும் குறைந்த போட்டிகளில் ஐம்பது விக்கெட்டுகளை எட்டிய சாதனை பட்டியலில் ஜயசூரிய இரண்டாவது இடத்திலேயே உள்ளார். அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் சார்லி டெர்னர் 1888 ஆம் ஆண்டு 6 டெஸ்ட் போட்டிகளில் 50 விக்கெட்டுகளை வீழ்த்தியது இன்று வரை சாதனையாக உள்ளது.

31 வயதான பிரபாத் ஜயசூரிய 2022 ஜுலை மாதம் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக தனது கன்னி டெஸ்டில் ஆடியது தொடக்கம் தொடர்ந்து சோபித்து வருகிறார். தனது கன்னிப் போட்டியிலேயே அவர் 177 ஓட்டங்களுக்கு மொத்தம் 12 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

# 72 ஆண்டுகளுக்குப் பின் இலங்கைக்கு கோலூன்றிப் பாய்தலில் ஆசிய பதக்கம்



உஸ்பெகிஸ்தானில் நடைபெற்று வரும் 5ஆவது ஆசிய இளையோர் மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் போட்டியின் ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் இலங்கையின் துஷேன் சில்வா வெள்ளிப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

போட்டியின் முதல் நாளான கடந்த வியாழனன்று (27) நடைபெற்ற ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் மாரிஸ் ஸ்டெல்லா கல்லூரியின் துஷேன் 4.70 மீற்றர் உயரம் தாவி மூன்றாம் இடம் பெற்றார்.

இதன்மூலம் 72 ஆண்டுகளுக்குப் பின் ஆசிய விளையாட்டு விழாவொன்றில் இலங்கை சார்பில் கோலூன்றிப் பாய்தலில் பதக்கம் வென்ற முதல் வீரர் என்ற பெருமையை அவர் பெற்றுக்கொண்டார்.

இதற்குமுன் 1951இல் நடைபெற்ற முதலாவது ஆசிய விளையாட்டு விழாவில் இலங்கை சார்பில் கோலூன்றிப் பாய்தலில் முதல் வெள்ளிப் பதக்கத்தை வென்ற வீரராக எம்.ஏ அக்பர் இடம்பிடித்திருந்தார்.

இதன்போது தனது தனிப்பட்ட அதிசிறந்த உயரத்தை தாவிய அவர், இளையோர் தேசிய சாதனையையும் முறியடித்தமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, வியாழக்கிழமை காலை நடைபெற்ற ஆண்களுக்கான 400 மீற்றர் முதலாவது தகுதிகாண் சுற்றில் பங்குகொண்ட காலி மஹிந்த கல்லூரி வீரர் ஐத்ய கிருலு போட்டித் தூரத்தை 48.57 விநாடிகளில் ஓடி முடித்து மூன்றாவது இடத்தைப் பிடித்தார். இதன்மூலம் அவர் அரை இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றார்.

30 ஆசிய நாடுகளின் பங்குபற்றலுடன் சுமார் ஆயிரம் விளையாட்டு வீரர்கள் பங்கேற்றுள்ள இம்முறை ஆசிய இளையோர் மெய்வல்லுனர் சம்பியன்ஷிப்பில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி 5 ஆண்கள் மற்றும் 2 பெண்கள் என மொத்தம் 7 வீர, வீராங்கனைகள் பங்குபற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பங்களாதேஷ் மகளிர் அணி பயிற்சிப் போட்டியில் வெற்றி



பங்களாதேஷ் மகளிர் அணிக்கு எதிரான ஒருநாள் பயிற்சிப் போட்டியில் இலங்கை கிரிக்கெட் சபை பதினொருவர் மகளிர் அணி 27 ஓட்டங்களால் தோல்வியை சந்தித்தது.

கொழும்பு கிரிக்கெட் கழக மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை (27) நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட பங்களாதேஷ் அணியை 116 ஓட்டங்களுக்கு சுருட்ட இலங்கை கிரிக்கெட் சபை அணியால் முடிந்தது.

பந்துவீச்சில் துஷிக்கா மேதானந்த, மால்கி மாதரா மற்றும் தருக்கா செஹானி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

தொடர்ந்து இலகுவான இலக்கை நோக்கி பதிலெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை கிரிக்கெட் சபை அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்தது. அந்த அணி 33.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 89 ஓட்டங்களையே பெற்றது. அதிகபட்சமாக உமேஷா திமாஷினி 24 ஓட்டங்களை பெற்றார்.

பங்களாதேஷ் மகளிர் அணியின் பந்துவீச்சில் பாஹிமா கட்டுன் 22 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை கைப்பற்றி அந்த அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும்பங்களாதேஷ்மகளிர் அணி இலங்கையுடன் மூன்று ஒருநாள் மற்றும் மூன்று டி20 போட்டிகளில் ஆடவுள்ளது. இதன் ஒருநாள் போட்டிகள் வரும் ஏப்ரல் 29 மற்றும் மே 2, 4 ஆம் திகதிகளிலும் டி20 போட்டிகள் மே 9, 11, 12 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன.

ஒருநாள் போட்டிகள் அனைத்தும் பீ. சரா ஓவல் மைதானத்திலும் டி20 போட்டிகள் கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

# 3 ஆண்டுகளின் பின் தேசிய விளையாட்டு விழா



மூன்று ஆண்டு கால நீண்ட இடைவெளிக்குப் பின் இலங்கையின் பிரதான விளையாட்டு திருவிழாவான தேசிய விளையாட்டு விழாவை இந்த ஆண்டு நடத்துவதற்கு விளையாட்டுத்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

47ஆவது தடவையாக நடைபெறவுள்ள இம்முறை தேசிய விளையாட்டு விழாவில் 27 போட்டி நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. இதன்படி, இம்முறை தேசிய விளையாட்டு விழாவின் முதல் சுற்றுப் போட்டி நிகழ்ச்சிகள் எதிர்வரும் மே 12ஆம் திகதி பொலன்னறுவையில் ஆரம்பமாகவுள்ளது. இதில் மே 12ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை பெண்கள் மற்றும் ஆண்களுக்கான கால்பந்து மற்றும் கபடி போட்டிகள் நடைபெறவுள்ளன.

மே 20ஆம் திகதி முதல் ஜூன் 06ஆம் திகதி வரை கொழும்பில் இரண்டாம் சுற்று போட்டி நிகழ்ச்சிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதில் பெட்மிண்டன், கயிறிழுத்தல், கூடைப்பந்து, நீச்சல் மற்றும் கெரம் ஆகிய போட்டி நிகழ்ச்சிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

கடற்கரை கரப்பந்து மற்றும் கடற்கரை கபடி ஆகிய போட்டி நிகழ்ச்சிகள் மே 10 மற்றும் 11ஆம் திகதிகளில் நீர்கொழும்பு கடற்கரையில் நடைபெறவுள்ளது.

அதே நாட்களில் பொலன்னறுவையில் பளுதூக்கல் போட்டி நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது.

செஸ், கராத்தே, வூசூ மற்றும் ஜூடோ ஆகிய போட்டி நிகழ்ச்சிகள் கொழும்பு சுகததாச மற்றும் டொரிங்டன் மைதானங்களில் ஜூன் 16ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. பெண்கள் மற்றும் ஆண்கள் கிரிக்கெட் போட்டி ஜூன் 30 முதல் ஜூலை 2 வரை எம்பிலிப்பிட்டியவில் நடைபெறவுள்ளதுடன், வலைப்பந்தாட்டப் போட்டிகள் ஜூலை முதலாம் மற்றும் 2ஆம் திகதிகளில் திகன மைதானத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

குத்துச்சண்டை, எல்லே, றக்பி, ஹொக்கி, டைக்கொண்டோ, ஜிம்னாஸ்டிக்ஸ், மல்யுத்தம் மற்றும் மேசைப்பந்து ஆகிய போட்டி நிகழ்ச்சிகள் ஜூலை மாதத்தில் நடைபெறவுள்ளதுடன், கொழும்பு மற்றும் அனுராதபுரம் நகரங்களில் இந்தப் போட்டி நிகழ்ச்சிகளை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் 4ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை கொழும்பில் ஆணழகன் மற்றும் கரப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளதோடு, அந்தப் போட்டிகளுடன் தேசிய விளையாட்டு விழாவுக்கான அனைத்து போட்டி நிகழ்ச்சிகளும் நிறைவடையும்.

தொடர்ந்து, தேசிய விளையாட்டு விழாவின் இறுதிப் போட்டி நிகழ்ச்சியான மெய்வல்லுனர் போட்டிகள் ஓகஸ்ட் மாதம் 4, 5 மற்றும் 6ஆம் திகதிகளில் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

2019ஆம் ஆண்டுக்குப் பின் ஏற்பட்ட கொரோனா தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக தொடர்ந்து மூன்று வருடங்களாக தேசிய விளையாட்டு விழா நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.